297

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

# குர்ஆன் ஆங்கில வியாக்கியான ஆராய்ச்சியின் முகவுரை.

"முஸல்மான்" ஆசிரியர்
தென்காசி
மீ. இ. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப்
அவர்களாலியற்றப்பெற்று

திருநெல்வேலி
மீரானியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1926.

—(*)—

அணா 4.

Q7'.21
N26.
176484

# இங்கிலீஷ் புஸ்தகங்கள்.

பஹிரங்க நிரூபம்:- இங்கிலீஷ் குர்ஆன் எழுதிய முஹம்மதலி எம். ஏ., எல். எல். பி என்பவருக்கு அவரின் தவறுகளைப்பற்றி விபரித்தெழுதப்பட்டிருக்கிறது. இதுவரை அவரால் பதில் கூறமுடியவில்லை விலை ரூபாய் 0—4—0.

மிர்ஸாயிமுடிவு:- ஹஸ்ரத் ஈஸா (அலை) சிலுவையில் அறையப்படவில்லை. அதற்குபதிலாக வேறொருவர் அறையப்பட்டார். என்பதை ருஜூப்படுத்தி கிறிஸ்தவர், யூதர்களின் ஆதாரங்களையும் மறுக்கப்பட்டிருக்கிறது. விலை ரூபாய் 0—5—0.

## உர்தூ கிதாபுகள்

1. பாஷாரத்தே முஹம்மதி:- காதியானி கலீபா தமது தந்தையின் நபித்தனத்தைருஜூப்பிக்க கொடுத்த தலீல்களை ஆராய்ச்சியுடன் மறுத்து, குர்ஆனில் கூறப்பட்ட அஹ்மது நமது நாயகம் என்பதை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. விலைரூபாய் 0—8—0.

2. தஹக்கிக்:- ஹஸ்ரத் ஈஸா (அலை) காஷ்மீரில் மரணமடையவில்லை. வானத்துக்கு உயர்த்தப்பட்டார்கள் என்பதை ருஜூப்படுத்தி, லாகூர்காதியானிகளின் புரட்டுகளை விளக்கப்பட்டிருக்கிறது. விலை ரூபாய் 0—4—0.

3. மிர்ஸாயி காத்திமா:- ஹஸ்ரத் ஈஸா (அலை) சிலுவையில் அறையப்படவில்லையென்று அவர்களுக்குப்பதிலாக வேறொருவன் சிலுவையில் அறையப்பட்டானென்றும், ருஜூப்படுத்துகிறதுடன், யூத கிரிஸ்தவர்களின் கோட்பாட்டையும், அவர்களின் பைபிளைக்கொண்டே மறுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 0—4—0.

4. முஜத்திது:- மிர்ஸா ஸாஹிபை முஜத்திதென்று கூறும் லாகூர் பார்ட்டியின் ஆதாரங்களைக் கொண்டே அவர் முஜத்திதல்லவென ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. விலை. ரூ. 0—4—0.

5. முபாஹீஸா ஹக்கானி:- ஒருகாதியானி மௌல்விக்கும் "இஸ்லாமிய" மௌல்விக்கும் நமது நாயகத்துக்குப் பின் நபி வரக்கூடுமாவென்ற விஷயத்தைப்பற்றி நடந்த வாதம். இதன் இறுதியில் மத்தியஸ்தர்களின் அபிப்பிராயமும் எழுதப்பட்டிருக்கிறது. விலை ரூ. 0—9—0.

6. ஷஹாதத்துல் குர்ஆன்:-இதில் ஹஸ்ரத் ஈஸா(அலை)மரணமாகவில்லை. விண்ணுலகுக்கு உயர்த்தப்பட்டார்களென்பதை குர்ஆனைக்கொண்டே ருஜூப்படுத்தி காதியானிகளின் துர் அர்த்தங்களை இலக்கண இலக்கிய பூர்வமாக பொய்யாக்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 0—14—0.

முஸல்மான் புத்தகசாலை, தென்காசி.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# குர்ஆன் ஆங்கில வியாக்கியான ஆராய்ச்சியின் முகவுரை.

"முஸல்மான்" ஆசிரியர்
தென்காசி
மீ. இ. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப்
அவர்களாலியற்றப்பெற்று

திருநெல்வேலி
மீரானியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1926.

விலை —(*)— அணு 4.

புத்தகம் கிடைக்குமிடம்:—

"முஸல்மான்" ஆபீஸ்

தென்காசி.

# பிழை திருத்த அட்டவணை.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 13 | உயர்த | உயர்ந்த |
| ,, | 23 | சம்பாஷணையிகளில் | சம்பாஷணைகளில் |
| 4 | 10 | இஞ்ஞனம் | இங்ஙனம் |
| ,, | 16 | வேறுபடித்தி | வேறுபடுத்தி |
| 6 | 18 | கட்டனஞ் | கண்டனஞ் |
| 12 | 28 | ஸன்ஸ | ஸயன்ஸ் |
| 13 | 21 | செய்பப்பட்டோம் | செய்யமாட்டோம் |
| 14 | 13 | பையிளி | பைபிளி |
| ,, | 16 | அற்புகங்கள் | அற்புதங்கள் |
| ,, | 24 | கிதாயில் | கிதாபில் |
| 15 | 1 | மூலகருத்தி | மூலக்கருத்தி |
| 16 | 26 | ஆங்கிகரி | அங்கீகரி |
| ,, | 33 | அசாத்தியமல்ல | சாத்தியமல்ல |
| 18 | 1 | பிரிந்து | பிரித்து |
| 19 | 24 | உண்டக்கும் | உண்டாகும் |
| 22 | 22 | நோர்ந்த | நேர்ந்த |
| 26 | 19 | முப்பிராதாத்தி | முப்ரதாத்தி |
| 27 | 26 | திருங்கு | திருக்கு |
| 29 | 22 | அறிந்திருந்தும் | அளித்திருந்தும் |
| 31 | 33 | மழிக்காத | மளிக்காத |
| 34 | 27 | அங்ஙஞ் | அங்ஙனஞ் |
| ,, | ,, | குழத்தை | குழந்தை |
| 36 | 24 | தகுந் | தகுந்த |
| 37 | 15 | ஹதீதுஸ்ஸமா | வஹீதுஸ்ஸமா |
| ,, | 32 | விக்கியானம் | வியாக்கியானம் |
| ,, | ,, | பட்டவையும் | பட்டவையர்யும் |
| 38 | 17 | கூடயது | கூடியது |

# முஸ்லிம்களிடம் வேண்டுகோள்.

சகோதரர்களே! காதியானிமதஸ்தர்களுக்கு அவர்களின் மூலஸ்தானத்திலிருந்து வேண்டிய பண சகாயம் கிடைப்பதால், அன்னார் தங்கள் நோக்கத்தை வெளியிட்டு முஸ்லிம்களைச் சீர் குலைப்பதில் சுறுசுறுப்புக்காட்டுகிறார்கள். முஸ்லிம்களில் அங் ஙனமில்லையாதலால், இம் மதசேவைக்கு உதவிபுரிதல், மதா பிமான முள்ள முஸ்லிம்களைமட்டும் பொறுத்ததென்பது வெள் ளிடைமலைபோல் விளங்காநிற்கின்றது. ஆங்கில குர்ஆன் விரி வுரையில், காதியானிமௌல்வி செய்திருக்கும் ஸயன்ஸ புரட்டு களை தெள்ளிதில் விளக்கிச் சகோதர முஸ்லிம்களின் உண்மைக் கோட்பாடுகளைக் காப்பாற்றும் பொருட்டு அதற்குத்தகுந்த ஆராய்ச்சியுடன் மறுப்புரை எழுதுவது மகா அவசியமென்பதை தாங்களறிவீர்கள். இத்தகைய மகா அவசியமான காரியத்தை செய்துமுடித்தல் சாதாரணமான காரியமல்லவாதலால், இத் தகைய புண்ணிய சேவைக்கு தாங்கள் என்ன உதவிகள் செய் திருக்கிறீர்களென்பதை தங்கள்பால் வினவ விரும்புகிறோம்.

குர்ஆன் ஷரீபின் மெய்யருத்தங்களைப்புரட்டி பொய்யருத் தங்களையமைத்து தமிழில் வெளிவருவதைப் பார்த்திருந்தும் ஊமையைப்போல் மௌனமாயிருப்பீர்களேல், நாளை அல்லா ஹுடைய சமுகத்தில் கடினமாகக் கடாவப்படுவீர்களென் பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஆண்டவனே எங்களுக்கு மதஉணர்ச்சியை தந்தருள்வாயாக!

மானேஜர் "**முஸல்மான்**" **ஆபீஸ், தென்காசி.**

# நூன்முகம்.

மேனாட்டாரின் நாகரீகம் பரவி வருகின்ற இக்காலத்தில் ஸயன்ஸ் என்ற இயற்கை சாஸ்திரம் ஜாஸ்தியான மதிப்புப்பெற்று விளங்குகிறது. ஜின், ஷைத்தான், அற்புதம் இவைகளின் உண்மையை விசுவாசிக்காத இந்த சாஸ்திரம் சிலர் இயற்றியுள்ள குர்ஆன் தப்ஸீர்களிலும் ஆதிக்கம் பெற்று நிற்கின்றது. இந் நூலின்மீது தான் மிர்ஸா ஸாஹிபு தம்முடைய இஸ்லாமுக்கு மாறான கொள்கைகளை நிலைத்தாட்டினர். அவருடைய முக்கியசீஷரும் அவருடையசிஷ்யரின் ஒருசார்பாருக்கு தற்போது கலீபாவாக விளங்குபவருமான முஹம்மதலிஸாஹிபு எம். எ , எல். எல். பி., என்பவர் அந்த ஸயன்ஸுக் கொப்ப தமது தப்ஸீர் எழுதி முடித்துப் பிரசுரஞ்செய்தார்.

இத் தப்ஸீருக்கு எதிருறைகூற எவரும் முன் வராமையைக் கண்ணுற்ற ஹெட்மாஸ்டர், சர்கோதா (பஞ்சாப்) ஜனப், ஷெகுகுலாம் ஹைதர் ஸாஹிபு அவர்கள் அத் தப்ஸீரைப்பற்றி "ஆராய்ச்சி" ஒன்று எழுதலானர்கள். அவ்வாராய்ச்சி ஆங்கிலே யத்திலியற்றப்பட்டமையாலும், நம் நாட்டு சாதாரண ஜனங்களிற் பெரும்பான்மையோர் அப் பாஷை அறியாதவர்களாகையாலும், யாம் அதைத் தமிழில் மொழிபெயர்க்க உன்னி முதன் முதலில் அந்த "ஆராய்ச்சியின் முகவுரை" யைத் தமிழ்ப்படுத்த அதனாசிரியரிடமிருந்து உத்தரவு பெற்றுள்ளோம்.

அப்பால் அதனை மொழிபெயர்க்கும்படி, ஆங்கிலம் கற்று வரும் மாணவர், கடையநல்லூர் ஜனப், கொ. முஹம்மது ஹுஸைன் ஸாஹிபு, தென்காசி ஜனப், இ. மு. முஹம்மதுமுஸ்தபா ஸாஹிபு, ஆகிய இவ்விருவரிடத்திலும் யாம் வேண்டிக்கொண்டோம். அன்னார் அதற்கிசைந்து தங்கள் படிப்பிற்கு வேண்டிய நேரம்போக எஞ்சிய சமயங்களில் அதைத் தமிழ்ப்படுத்தி நன்கொடையாக நம் "முஸல்மான்" ஆபீஸுக்கு அனுப்பியுள்ளார்கள். அம் மொழிபெயர்ப்பை யாமும் பார்வையிட்டோம். ஒருக்கால் அதில் தவறுதல்கள் தென்படினும் தென்படலாம் அவ்வாறு கண்டு அறிஞர்கள் எமக்கு அறிவிப்பின் அடுத்த பதிப்பில் யாம் அவற்றைத் திருத்தி அமைப்போம்.

இறுதியாக, ஜனங்கள் இப்புத்தகத்தை நன்ருய் வாசித்து காதியானிகள் வழிதவறியவர்களே, முஹம்மதலி ஸாஹிபு இயற்றிய • தப்ஸீர் மார்க்கமாற்றம் என்று உணர்வார்களாஞல் இப்புத்தகத்தை மொழி பெயர்க்க அரும் பிரையாசை எடுத்த யாம் எமது நோக்கம் நிறைவேறியதாயும், இதை மொழிபெயர்ப்பதற்காக யாம் செலவுசெய்த நேரம் வீணில் செலவு செய்யப்படவில்லை எனவும் கருதி மகிழ்ச்சியடைவோம். ஆண்டவன் குலாம் ஹைதர் அவர்களுக்கும் இதை மொழிபெயர்த்தவர்களுக்கும், இதற்கு ஒத்தாசை செய்தோர் முதலிய அனைவர்களுக்கும் கிருபை செய்வாஞகவும். ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

ஹிஜ்ரி 1344
ரபிஉல்ஆகிர்

மீ. இ. முகம்மது அப்துல்காதிர்,
தென்காசி.

1

بسم الله الرحمن الرحيم

# குர்ஆன் ஆங்கில வியாக்கியான ஆராய்ச்சியின்

## முகவுரை.

கிருபையாளனும் இறக்கமுடையோனுமாகிய
அல்லாவின் திருநாமத்தால்.

**எம். முஹம்மதலி எம். எ., எல். எல். பி., என்பவர்,**
இங்கிலீஷில் இயற்றியுள்ள திருக்குர்ஆனின் தர்ஜுமாவும்
வியாக்கியானமும் என்ற கிதாபைப்பற்றி
மாஸ்டர் ஷைகு குலாம் ஹைதர் அவர்களியற்றிய
ஆராய்ச்சியின் முகவுரை.

## விசேஷ விளம்பரம்.

முதன் முதலிலிருந்த அதாவது மூலாதாரமான இஸ்லாமியக் கொள்கைகளைச் சார்ந்தோரின் சார்பாக நின்று இவ் வாசகத்தை ஆராயுங்கால் அது இம்மாதிரியில் முழுதும் புதிதாகயிருப்பதால் எனது முஸ்லிம் சோதரர் இதை மிகுந்த கருத்தோடும் கவனத்தோடும் வாசிக்கக்கேட்டுக்கொள்கிறேன்.

இவ் வாசகத்தின் இறுதியில் எம். முஹம்மதலி எம். எ., எல். எல். பி., க்கு நல்லெண்ணத்துடன் ஒரு கடிதமும், பொது ஜனங்களுக்கோர் புகட்டுதலான அறிக்கையும் திருக்குர்ஆனை மொழிபெயர்த்திருக்கும் இதர முஸ்லிம்களின் நாமங்களும், அவர்களொவ்வொருவரையும் பற்றிய ஆராய்ச்சிகளும் எழுதி இருக்கிறேன்.

மேலும், பூர்வீக இஸ்லாமிய வழிப்படி உருதுப்பாஷையில் குர்ஆனின் தர்ஜுமாவும், மற்றும் ஆராய்ச்சிகளும், குறிப்புகளும் நிறம்பியுள்ள சில கிதாபுகளைக் கூறியுள்ளேன் நான் இப்புத்தகத்தின் கடைசியில் உத்தேசித்திருக்கிற பிரகாரமாக சுத்தமாக சுன்னத்துஜமாஅத்துப் பாதையைப் பின்பற்றி குர்ஆன் தர்ஜுமாவும் ஆராய்ச்சியும் பிரசுரமாகும்வரை நஸாராக்களும் புதிதாகக் கிளம்பியுள்ள சில முஸ்லிம் வகுப்பாரும், எழுதிய கிதாபுகளைப் பார்க்கிறதைவிட, மேற்கூறிய கிதாபுகளைப் படிக்கவும், சந்தேகநிவிர்த்திக்காகப் பார்ப்பதும் சாலச்சிறந்தது. *

இவ் வாசகத்தைப் பிரசுரமாக்கி 1000-ம் புத்தகங்களை ஜனங்களுக்கு ஒரு சிறிதும் விலையில்லாது அளிக்கும்படி தயவுடன் நிதியனுப்பி உதவிபுரிந்த முஸ்லிம் சகோதரருக்கு நன்றி செலுத்த நான் கடமைப்பட்டுள்ளேன். ஆயினும் இதைவிட, ஜாஸ்திக் காப்பிகள் பிரசுரமாக்கி அதிக ஜனங்களுக்கு அளிக்க விரும்புகிறேன். ஆதலால் சில ஐஸ்வரிய முஸல்மான்கள் குதுகலத்துடன் முன்வந்து இவ் விசேஷ வேலையில் உதவிபுரிய வேண்டும்.

ஷேக் குலாம் ஹைதர்.

---

* "மேற்கூறிய கிதாபுகள்" என்றது முஸ்லிம்கள் உர்துவில் இயற்றியவை. அவைகளின் நாமங்களை இப் புத்தகத்தின் இறுதியில் பார்த்துக் கொள்ளவும். (ப-ர்)

## முகவுரை.

கலையில் தேர்ந்த மௌல்வி, முஹம்மதலி ஸாஹிபை ஜனங்களுக்கு அறிமுகம் செய்வதற்கு முன் அன்னாருடைய எஜமானனுயுள்ள வழிகாட்டியைப்பற்றிச் சிறிது கூற வேண்டியது அத்தியாவசியமாகும். ஏனெனில், இஸ்லாமைப் பற்றி அவ்வழிகாட்டியின் கூற்றுகளும், நம்பிக்கைகளும் நீண்ட காலமாக நிலைநிறுத்தப்பட்ட பாதையை விட்டும் சற்று விலகியிருந்ததுந் தவிர அவருடைய சிஷ்ரின் * மனதிற்பதிந்து அவரை அவைகளுக்கொப்பத் தம்முடைய மொழிபெயர்ப்பையும், அதன் வியாசத்தையும் ஒருவிதமாக எழுதும்படிச்செய்து விட்டன. இவைகளைப்பற்றி பின் ஆராய்வோம்.

மிர்ஸாகுலாம் அஹமது என்னும் அவ்வழிகாட்டி பஞ்சாபின் கண்ணுள்ள குர்தாஸ்பூர் ஜில்லாவில் காதியான் என்னும் கிராமத்தில் உயர்த ஓர் குடும்பத்தில் உதித்தவர். மிர்ஸாகுலாம் முர்த்தஸா என்பது அவர்தம் பிதாவின் நாமதேயம். ஆரம்பத்தில் அவர் சியால்கோட்டில் சிலகாலமாக ஜூனியர் கிளார்க் உத்தியோகமென்றை ¶ வகித்தார். அவ்வேலை தமக்குப் போதுமான வரும்படி யளிப்பதில்லை யென்பதைக்கண்ட அவர் அதை இராஜிநாமாச் செய்துவிட்டு முக்தார் வேலைக்குப் பிரயத்தனஞ் செய்தார். ஆனுல், அதற்கு வேண்டிய பரீக்ஷையில் பாசாகாததால் தம்முடைய சொந்தவூர் திரும்பி பாஷா ஞானத்தில் தம்மனதைச் செலுத்தவேண்டுமென்று கருத்துட் கொண்டார். மதசம்பந்தமான சம்பாஷணையிகளில் அவர் உவப்பு மிகுந்துள்ளவராதலால் வெகுசீக்கிரத்திற்குள் "பராஹீன அஹ்மதியா" என்னும் புத்தகமொன்றைக் கோர்வைசெய்து நான்கு பாகங்களாக அதைப் பிரசுரம் பண்ணினுர். அஃதோடு இன்னும் சில பாகங்களெழுதுவதாக வாக்களித்தார். ஆனுல் பின்

---

* "அவருடைய சிஷரெ"ன்று இவிடம் ஒருமைப்படுத்திக் கூறியது மேற்சொன்ன மௌல்வியைக்குறிக்கும்.

¶ ஜூனியர் கிளர்க் கென்னும் வேலை, கிளர்க் (குமஸ்தா) வேலையினின்றும் சற்றுத்தாழ்ந்ததும், குறைவான சம்பளமுமுடைய தொரு உத்தியோகம்.

அவருக்கு நேர்ந்த வேலைக்கஷ்டங்களால் அவர் வாக்குறுதியை நிறைவேறறக் காலமில்லாது போயிற்று. அவ் வேலைக்கஷ்டங்கள் எவையெனப் பின் தெரியவரும்.

மேற்சொன்ன கிதாபில் அவர் இஸ்லாம், இதர மதங்களைப் போலல்லாது சத்தியமானதும் நிர்மலமானது (அழிவில்லாதது) மான மார்க்கமென்றும் மற்ற மார்க்கங்கள் பயனற்றவைகளாயும் கெட்டுப்போன மானிடவர்க்கத்தை முன்னுக்குக்கொண்டுவரச் சக்தியற்றவைகளாயும் நாகரீகத்தில் சதா விர்த்திபண்ணிக் கொண்டுவரும் உலகத்திற்கு ஒத்தில்லாதவைகளாயும் இருக்கின்றன வென்றும் வெகு கடினமாயெழுதினார். இஞ்ஙனம் கண்டனம் செய்ததுமன்றி திருக்குர்ஆனைத் தவிர்த்து வேதங்களென்று வழங்கப்படும் புத்தகங்கள் யாவும் அவைகளுடைய ஆரம்ப பரிசுத்தத்தை இழந்துவிட்டனவென்றும் அதற்குக் காரணம் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மனிதர்களுண்டாகி தங்களுடைய சுயத்திற்குப் பொருந்தும்பொருட்டுத் தாறுமாறாக அவைகளை வேறுபடித்தி வரைந்துகொண்டதுதானென்றும், ஜனங்களுக்கு அவர் தெளிவாய் எடுத்துக்காண்பிவித்தார்.

இப்பேற்பட்ட பிரபலமானதும் தெளிவானதுமான கிதாபு உர்துபாஷையில் வெளிவந்தபோது அதை எதிர்பாராத திவ்விய ஓர் கடாட்சமென்று இந்நாட்டிலுள்ள சென்ற நூற்றாண்டு முஸ்லிம்கள் மிகக்கொண்டாடினார்கள். சகல முஸ்லிம்களும் அப்புத்தகத்தை ஒருவர் பாக்கியில்லாது அருமைபாராட்டவே இஸ்லாம் பூர்வீகத்தில் எங்ஙனமிருந்ததோ அங்ஙனமே அதை முழுதும் நம்பிய முஸ்லிம் ஆலிம்களுங்கூட அந் நூலாசிரியரைப் பற்றி அமிதமாகப் புகழ ஆரம்பித்துவிட்டனர். இதுமட்டுமல்லாமல் மிர்ஸா ஸாஹிபுக்கு அவர் எழுதிய பாகங்களுக்குக் கிரையமாயும், வாக்களித்திருந்த பாகங்களுக்கு முன்பணமாயும் பொருள் ரொக்கமாய் குவியல் குவியலாய் வந்தது. அவருடைய புத்தகங்கள் ஏராளமாய் விற்ற கண்காக்ஷியும் அதை ஜனங்கள் அவர் * கூட எதிர்பாராதமாதிரியாக மெச்சின விதமும் அவ

---

* "அவர்" மிர்ஸா. அவர் முதன் முதலில் தம்முடைய புத்தகத்தால் தமக்கு மிகுந்த புகழ்கிடைக்குமென்று எண்ணினாரில்லை. ஆதலால் அமிதமான புகழ்கிடைத்தவுடனே அவர் அதனால் கௌரவ மதிகரித்தவராய் இறுதியில் நேர்பாதையைவிட்டும், விலக்கும்படியான பட்டங்களைத்தமது கௌரவத்திற்குத் தக்கனவென்று தரித்துக்கொண்டார்.

ருடைய பொக்கிஷத்தை நாணயங்களால் நிறப்பினதுமட்டு மல்லாமல் அநேகரை அவருடைய சிஷ்யர்களாகவும் ஆக்கிவிட்டது. அச்சீஷரிற் சிறுபான்மையோர் தாங்கள் தங்களுடைய புதிதாக ஒப்புக்கொண்ட எஜமானரின் முன்னிருந்து நேரிலேயே மதசம்பந்தமான காரியங்களைத் தெள்ளெனத்தெரியும்படி, படிக்க வேண்டுமென்னும் உள்ளத்தராய் தமது வீடுவாயல்களைத்துறந்து காதியானிலேயே வந்து குடியிருக்கத் தலைப்பட்டனர்.

ஓர் விஷயம் கவனிக்கத்தக்கதாயும் ஞாபகத்தில் வைக்கத் தக்கதாயுமிருக்கிறது. அதாவது: உலகத்தினிறுதியில் ஈசாநபி எம்மாதிரியாக இரண்டாந்தரம் உலகம் வருவார்களென்று உண்மைமுஸ்லிம் மதாச்சாரியரில் பெரும்பான்மையோர் பக்தியும், விசுவாசமும் வைத்திருந்தனரோ அம் மாதிரியாகவே, மிர்ஸா ஸாஹிபும் மேற்சொன்ன புத்தகம் பிரசுரமாகும்வரை விசுவாசித்திருந்தார். ஆனால், அக்கிதாபில் அநேக ஹிக்மத்துகளை (இரகசியங்களை) வரைந்துகொண்டார். அவைகளில் பெரும் பாலானவை திருநபி (சல்) யவர்களுக்கு திருக்குர்ஆன் மூலமாயளிக்கப்பட்டவையேயாகும். அந்த ஹிக்மத்துகளைக் காலஞ்செல்லச்செல்ல தமது சுயநலத்திற்கு உபயோகப்படுத்தக்கூடிய நிலைமையில் அமைத்துக்கொண்டார்.

அநேக சிஷர் தம்முடைய முக்கிய ஸ்தலத்திலே * தமக்கு முன் பணிந்து நிற்பதையும் அயலிலிருந்து இன்னும் அநேகர் தம்மை அவர்களின் வழிகாட்டியென்று ஒப்புக்கொள்வதையும் கண்ணுற்ற மிர்ஸா தாம் ஈஸா அலைஹிஸ்ஸலாத்தைப் "போலுள்ளவர்" என்று சகலருக்குந் தெரிவிக்க சற்றும் கூசவில்லை. இந்த இவர் கூற்றுனது முன் இவர் தம்முடைய புத்தகத்திலெழுதியிருந்த கொள்கைகளுக்கும், உண்மை முஸ்லிம் மதாச்சாரியரின் விசுவாசத்திற்கும் சற்று வேறுபட்டபோதிலும், அக்காரியத்தைதப்பற்றி சிலசிலரைத்தவிர அது இஸ்லாமுக்கு நேர்ந்த துரதிஷ்டமென்று ஒருவரும எண்ணினரில்லை. ஏனெனில், அவர் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுடைய மறுவருகையைக் குறித்து முன்னால் யாது விசுவாசித்திருந்தாரோ அதே பிரகாரம் தற்பொழுதும் நம்பிவந்தார்.

* "முக்கியஸ்தலம்" காதியானிகிராமம் பிறந்த ஸ்தலமும் அதே.

தாம் மேற்கண்டவாறு சொல்லிக்கொண்டதைப் பற்றித் தம்மை வழிகாட்டியென்று ஒப்புக்கொண்டோரும், மற்ற பொது முஸல்மான்களும் இதைத் தன்பாலுள்ள ஒரு குறும்புத் தனமாகக் கருதாமல் மௌனமாயிருந்ததைக்கண்ட மிர்ஸா சந்தோஷமிகுந்துள்ளவராய் சற்றேனும் தாளாது போதுமென்ற மனத்திலராய் தாமே ஈஸா அலைஹிஸ்ஸலாமின் அவதாரமென்று அறிவிக்கலானார். ஈஸாநபியவர்களின் ஆத்துமசக்தி தம்முடைய சரீரத்தில் குடியிருந்து வருவதாயும் ஈஸாநபி முன்னிருந்த ஜடலத்தோடு இவ்வுலகத்திற்கு இரண்டாந்தடவைவருவது ஸயன்சுக்கு பொருந்தாததென்றும் * அவர்கள் தெய்வலோகம் புகவில்லையெனவும் சிலுவையிலிருந்து தப்புவிக்கப்பட்டு இழந்து போன ஆடுகளாகிய இஸ்ரவேல் ஜாதியாரைத்தேடி காஷ்மீருக்கு வந்தபோது ஸ்ரீநகர் என்னும் ஸ்தலத்தில் சுயமாக மௌத்தானார்களெனவும் செப்பலானார்.

இப்புதிய சுதந்திர உரிமையைச் செவியுறவே உலமாக்கள் அவருக்கு விரோதமாக எழும்பினார்கள். சிலர் அக்கோட்பாட்டைப் பொறுக்காது பேப்பர்களிலும், அதற்கென்றே அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களிலும் அதைக் கட்டனஞ் செய்தனர். அப்பால் வெவ்வேறு காரணங்களுக்காக வெவ்வேறு நியாய ஸ்தலங்களுக்கு வாதுக்கழைக்கப்பட்டார். ஓர் ஸ்தலத்தில் குற்றவாளியென்றுகண்டு அபராதம் விதிக்கப்பட்டார். மறுபடி அப்பீல் செய்துகொண்டதால் விடுதலையானார். மற்றொருசமயம் தாம் அதுமுதல் ஒருவருடைய மரணத்தைப் பற்றியும் தீர்க்கதரிசனம் சொல்வதில்லையென்று பத்திரத்தில் எழுதி கையெழுத்துப்போடும்படி நேர்ந்தது.

இத்தனைகாரியங்கள் நடந்தபோதிலும் அவருடைய சிஷ்ர்களின் சங்கியை அதிகரித்துக்கொண்டேயிருந்தது. ஆதலால் அவர் குதுகூலம் மிகுந்துள்ளவராய் திருநபி (சல்) அவர்

---

* "ஸயன்ஸென்பது" இயற்கைநூல். அதாவது உலகத்தை இயற்கையென்பது அரசாண்டுவருவதாயும் அதனால் உலகமானது இயற்கைக்கு விரோதமாய் நடத்தல் முடியாதெனவும் கூறும் ஓர் சாஸ்திரம். ஆகவே இறந்தோர் திரும்பி ஜடலமும் உயிரும்பெற்று வரமாட்டார்களென்று இச்சயன்ஸ் கூறுவது வியப்பாகாது.

களுக்குப்பின் தான் நபி யென்றுவழக்காடுகிறவன் காபிரா யிருக்குமென்று தாம் முன் ஒப்புக்கொண்டுபகர்ந்ததை, முழு தும் மறந்து தம்மை ஒரு நபியென்று விளம்பரஞ்செய்தார். இவ்வாறு கூறியதால் உண்டாகும் கஷ்டநிஷ்டூரங்களிலிருந்து தப்பிக்கவேண்டியவழிகள் அவர் ஏராளமாய் அறிவாராதலால், அக் கஷ்டங்களை யகற்றவேண்டுமென்ற மனதோடு தம்மை நபி யென்று வழக்காடும்போது தாம் ஒரு சுதந்தரமாக, வேதமளிக் கப்பட்ட ரசூலுமல்ல வென்றும், தாம் நபிகள் நாயகத்தின் உண்மை உம்மத்துயென்றும் சொன்னார். இதுமட்டும்போதாது அவர் "எவன் முகம்மது நபியவர்களுக்குப்பின் தன்னை நபியென் பானோ அவர்களுடைய திருமுத்திரையைப் பெற்றிருக்கவேண் டும்; அதாவது, அவன் அவர்களுடைய பாதையைவிட்டுச் சற்றும் விலகாது ஒழுகவேண்டும்." என்றும் பிரஸ்தாபித்தார். சீக்கிரத்தில் சுயநலப்பிரிய அபேக்ஷை, இத் தருமச்சிந்தையிலும் ப்ரவி, முகம்மது நபியவர்களின் மரணத்திலிருந்து கியாம நாள் பரியந்தம் தம்மைத் தவிர ஏனையோரெவருக்கும் அவ்விதப்பதவி கிடையாதென்றும் வெளியிட்டார்.

நான் * மேலேகூறியபடி மிர்ஸா ஸாஹிபின் புதியவழக்குக ளானது. முஸல்மான்கள் மத்தியில் மிகுந்த குரோதங்கள் விளை வித்துவிட்டன. அவருடைய உறுதி சிஷ்யரில் சிலரும்கூட பல் வேறு காரணங்களுக்காக ஒருவரொருவராய் அவரைக்கைவிட் டார்களென்பதைச்செவியுற நமக்கு ஆச்சரியமாயிருக்கின்றது. இதைக்கண்ணூன்றிப்பார்த்து இதை நிறுத்தவேண்டுமென்ற ஆவல் அதிகரித்தவராய் மிர்ஸா ஸாஹிபு, 5-11-1907-ல் "தப் ஸிரா" என்ற பெரியதொரு பத்திரிகையைக் கடினமான எச் சரிக்கையாகப்பிரசுரம்பண்ணினார். அதில்தம்முடைய இஸ்லாமிய விரோதிகள் தாம் ஜீவந்தையாக இருக்கும்பொழுதே மரணிப் பார்களென்றும், அவர்கள் எல்லோரும் இறந்தபின், தான் தாம் மௌத்தாவாரென்றும், தம்முடைய சிஷ்யரொவ்வொருவரும் அப்பத்திரிகைநோட்டீஸைத் தங்களுடைய அலங்காரமண்ட பத்தில் பந்தோபஸ்துச்செய்து, மேற்சொன்ன தீர்க்கதரிசனம்

* இதில் "நான்" என்று தன்மையில் கூறப்பட்ட பதங்கள் இந் நூலாசிரியரைச்சாரும்.

நிறைவேறும் என்ற பரஸ்பர விஸ்வாசத்துடனிருக்கவேண்டுமென்றும், கண்டிப்பாய் எழுதினர். இவ்வாறு தீர்க்கதரிசனம் சொன்ன தீர்க்கதரிசியே அடுத்தவருடத்தில் (1908) கீர்த்தி பெற்ற வைத்தியர்களுடைய மருந்துகளுக்கும் குணமாகாமல் தம்முடைய முக்கிய ஸ்தலத்திற்கு வெகுதூரத்திலுள்ள லாகூரில் மரணமானது மேற்கண்ட பிரசுரத்தை (தப்ஸிராவை) உயிரற்ற வார்த்தைகளாக ஆக்கிவிட்டது. மேற்சொன்ன தீர்க்கதரிசனமும், இதர அவரின் தீர்க்கதரிசனங்களும் ஆண்டவனருளால் சொல்லப்பட்டவையன்று; என்பதற்கு இதுவே ஓர் நிதர்சனமாகும். இதர தீர்க்கதரிசனங்களென்று நாம் கூறியவற்றைபின் "மௌலவி முஹம்மதலி இயற்றிய குர்ஆனில், இங்கிலீஷ் மொழிபெயர்ப்பும், வியாக்கியானமும் என்பதன் ஆராய்ச்சி"யில் பார்த்துக்கொள்வோம்.

வைத்தியத்தொழிலில் மிகவும் கீர்த்திபெற்ற தேச வைத்தியரும், பின் காதியானியில் வசிக்கிறதற்காக அத் தொழிலை இராஜிநாமாச்செய்தவருமான ஹக்கீம் நூறுத்தீன் என்பவர் இறந்துபோன எஜமானுக்கு(மிர்ஸாவிற்கு)ப்பதிலாக கிலாபத்து ஸ்தானம் (தலைமைத்தனம்) வஹித்தார் காதியானிகளின் முக்கிய ஸ்தலத்தில் பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்யும் பத்திராதிபர்களுடன் இந்த ஹக்கீமும் சேர்ந்துகொண்டு எழுத்து மூலமாகவும், பிரசங்கமூலமாகவும் எல்லா சிஷ்யர்களையும் தங்களுடைய புதிதான கொள்கைகளில் பதிவாயிருக்கும்படி மிகுந்த பிரயத்தனஞ்செய்துவந்தார்.

இறந்துபோன மிர்ஸா இருபதுக்கு அதிகமான புத்தகங்களையும், நோட்டீசுகளையும் இயற்றியுள்ளார். அவைகள் யாவற்றிலும், அவர் தாமே மஸீஹென்றும், ஒரு நபியென்றும், மஹ்தி என்றும், இறுதியாக தாமே கிருஷ்ணஸ்வாமியென்றும், இன்னும் குர்ஆனிலுள்ள அநேகமாக ஒவ்வொரு நபியுந் தாமேயென்றும் வாதாடியிருக்கிறார். அவருடைய எழுத்துக்களில் ஓர் முக்கியமான விஷயம் கவனிக்கிறோம். அதாவது:— அவர், திருக்குர்ஆனாலும், புதிய ஏற்பாட்டாலும் அங்கீகரிக்கப்பட்ட ஈசா அலைஹிஸ்ஸலாமின் அற்புதங்களையும், அவர்களுடைய மானிட லக்ஷணகுணங்களையும் இழித்துத் தகாதவார்த்தைக

ளால் தூஷணிக்கிறார். இன்னும், அவர், தாம் மஸீஹென்று வழக்காடுகிறதால் ஜனங்கள் தம்மை மஸீஹைப்போல் அற்புதம் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்திப்பார்களெனவெண்ணி ஈசா நபியின் அற்புதங்களைக்குறைவாக மதித்தும் மறுத்தும்வந்தார்.

பொதுவாக, அற்புதங்கள்யாவும் இயற்கைக்கு விரோதமாயிருப்பதால் அவைகளைப் பொய்யாக்கியதற்கும், இயேசு இயற்கைப்படி இறந்துவிட்டாரென்று வாதித்ததற்கும் கௌரவங் கொடுக்கவேண்டுமென்றால், அக் கௌரவத்தை அலிகாரில், ஆங்கில முஹம்மதியக் கலாசாலையை ஸ்தாபித்த ஸர் ஸையது அஹ்மதுக்கே அளிக்கவேண்டும். * ஆனால் ஸர் ஸையதுடைய கொள்கைகளை அறிந்தமாத்திரத்திலே நமது மிர்ஸா, அற்புதங்களில் அபிமானமுடையவராய் ஸர் ஸையதுடன் வாதப்போர் கடூரமாகப்புரிந்தார். அவர் பல்வேறு காலங்களில் நபிமார்கள் தோன்றி இயற்கைக்கு மேற்பட்ட அற்புதங்களைச் செய்தது நிஜமென்றும், இவ் வுலக இயற்கைக்கு மேற்பட்டதும் மானிடரின் அறிவுக்கெட்டாததுமான தெய்வீகச்சக்தி ஒன்று இருக்கிறதென்றும், அச் சக்தி மார்க்கத்தெளிவில்லாத லோகாதயர்களாலும், தத்துவசாஸ்திரிகளாலும் ஆராயமுடியாதென்றும், இவைகளில் ஸர் ஸையதுக்கு விசுவாசமில்லாதிருப்பது வருந்தத்தக்கதே யென்றும் வாதாடினார். இவ்வளவு திடமாய் ஆதரித்த அற்புதங்களை மிர்ஸா வேறொரு சமயத்தில் பொய்யெனப் புறக்கணித்ததை வாசிக்க நமக்கு ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? சுலைமான் நபி (அலை) யைப்போல் (ம் அளவிடவொண்ணாத) விவேகமும் யுக்தியுமுள்ளவராலுங் கூட, இம் மிர்ஸா அற்புதங்களை நம்புகிறாரோ இல்லையோ என்று தீர்மானிக்கமுடியாதென்பது திண்ணமே. இன்னும் அவருடைய எழுத்துக்களை எவ்வளவு ஆராய்ச்சியுடன் வாசித்தாலும் அவருக்கு அந்தரங்க ஆதாரமாயிருக்கும் கொள்கைகள் இன்னின்னவை யென்று பொறுக்கியெடுத்தல் முழுதும் அசாத்தியமானகாரியம். முஸ்லிம் 14-ம் நூற்றாண்டின் மார்க்க சீர்திருத்தகரெனப் பெயர் புனைந்த இம் மிர்ஸா, ஈஸா நபி மறுமுறைதோன்றுவதைப்பற்றி

* ஸர் ஸையது அற்புதங்கள் பொய்யென்றும் ஈசா [அலை]. மாணித்தார்களென்றும் விசுவாசித்தாரென்பது கருத்து.

யும், நமது நபிகள் நாயகத்திற்குப்பின் நபித்தனமுண்டாவென்பதைப்பற்றியும், அற்புதங்கள் காணத்தக்கவிதமாய் நடந்தனவாவென்பதைப்பற்றியும், திருக்குர்ஆனின் கருத்தை விளக்க திருநபியின் ஹதீதுகள் அவசியமாவென்பதைப்பற்றியும், இன்னுமிவைபோன்ற சில முக்கிய இஸ்லாமிய விஷயங்களைப்பற்றியும் தமது புத்தகங்களில் ஈாருத்தமுண்டாகும்படி வரைந்துள்ளார். ஆகவே, அவருடைய குழப்பமான கொள்கைகளினின்றும் சரியான பாதையொன்றைக்கண்டுபிடிக்க வாசிப்போரின் தேர்ந்த மூளையும் ஏலாமல் ஏமாற்றமடையும்.

நான் விஷமத்தனமுள்ளவனாய் மேற்சொன்ன குறிப்பை எழுதினேனென்று சிலர் நினைக்கலாம், அது அங்ஙனமல்ல; ஏனெனில், இச்சிறந்த வழிகாட்டியினது கூட்டத்தாரின் இரு கட்சிகளும் இஸ்லாமுக்கும் இவருக்கும் உள்ள சம்பந்தமென்னவென்று தீர்மானிப்பதில் ஏற்பட்டவித்தியாசமே அக்குறிப்பை ருஜூப்படுத்துகிறது. ஒரு கட்சியார், அதாவது: மிர்ஸாவின் மகனைத் தங்கள் தலைவராகக்கொண்டவர்கள், இவரை வாக்களிக்கப்பட்ட மஸீஹென்றும், குர்ஆனிற் கூறியபடி ஈசாநபியவர்களால் முன்னறிக்கைசெய்யப்பட்ட நபியென்றும், இவ்விதம் ஒப்புக்கொள்ளாதவர்கள் வேதப்புறட்டராயும் இஸ்லாமை விட்டும் அப்புறப்பட்ட காபிராயுமிருக்கிறார்களென்றும் விசுவாசிக்கிறார்கள். மௌல்வி முஹம்மதலி எம். எ., எல். எல். பி., ஹக்கிம் நூறுத்தீன் மரணமானதும், தம்மை கலீபாவாக நியமியாமல் மிர்ஸாவின் அநுபோகமும், அபிவிர்த்தியுமற்ற மகனைத் தெரிந்துகொண்ட விசனத்துடன் காதியானைவிட்டுப்புறப்பட்டு லாகூர் சென்று ஆங்கு காதியானிகளின் மற்றொரு பிரிவால் கலீபாவாக நியமனம்பெற்றார். இந்த இரண்டாவது கட்சியார், மிர்ஸா ஸாஹிபு, பற்பல காலங்களில் அவதரித்த முஸ்லிம் சீர்திருத்தகரைப்போல் (ஹிஜிரி) 14-ம் நூற்றாண்டின் ஓர் சீர்திருத்தகராயிருக்கின்றாரென்றும், அவ்விஷயத்தில் மட்டுமே அவரை வாக்களிக்கப்பட்ட மஸீஹென்று நிர்ணயிக்கவேண்டுமென்றும், அவர் ஒரு நபியுமில்லை; தாம் நபியென்று வழக்காடவுமில்லையென்றும், இன்னும் அவரை நபியென்றும், மஸீஹென்றும் நம்பாத முஸ்லிம் இஸ்லாமைவிட்டுப் புறம்பானவனல்லவென்றும் நம்புகின்றனர்.

இஸ்லாமில் உள்ள முக்கியமற்ற சில விஷயங்களில் கற்றறிந்த (ஸுன்னத்து ஜமாஅத்து) உலமாக்களுக்குள் அபிப்பிராயபேதங்கள் உண்டாயிருந்தபோதிலும், ஈமானின் மூலாதாரமானதும் பிரத்தியட்சமுமான, அம்சங்களில் மிர்ஸாவின் கூட்டத்தார்மட்டுமே அபிப்பிராயபேதக முடைத்தாயிருக்கின்றனரென்பதை ஞாபகத்தில்வைக்கவேண்டும். ஓர் குறிப்பிட்ட பாதையைத் தெரிந்துகொள்ள சக்தியற்ற இக்கூட்டத்தார் வருந்தத்தக்கவிதமாக முட்டுப்பாடுண்டாகும் சந்தர்ப்பங்களில், மிர்ஸா ஸாஹிபின் கிதாபுகளிலுள்ள (ஈசருத்தமுள்ள) கோட்பாடுகளில் ஏதாவதொன்றைத் தெரிந்துகொள்ளும் பரிதாப நிலைக்கு வந்துவிட்டனர். (அக் கோட்பாடுகளோவெனில், கீர்த்திவாய்ந்த உலமாக்களுடைய மேற்கோள்களுக்கும், நபி நாயகத்தின் ஹதீதுகளுக்கும், முரண்படாமலிருக்கவில்லை.) ஒரே ஒரு காரியத்தில்தான் மேற்சொன்ன இருகட்சியாரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள்; அவர்களிருதரத்தோரும் ஒன்றுபோல், குர்ஆனில் கூறப்பட்டுள்ள அற்புதங்களை நம்பாமலும், ஈசா (அலை) சுயரூபமாக இனி இவ்வுலகம் வருவார்களென்று விசுவாசியாமலிருக்கிறதுந்தவிர, இருவருமொன்றுசேர்ந்து பற்பல காலங்களில் பற்பல நபிமார் புரிந்த அற்புதங்களுக்கு உலகத்திலில்லாத (விநோதமான) அர்த்தம் கொடுக்கின்றனர். எனவே, மௌல்வி முஹம்மதலி தமது குர்ஆன் மொழிபெயர்ப்பில், அவருக்கு விரோதமான காதியானியிலுள்ள பிரிவினரோடு ஒத்திணங்கி அற்புதங்களை மறுத்திருக்கும் விஷயம் நமக்கு இலேசாய் விளங்குகிறது. அற்புதங்களைப்பற்றிப் பேசுங்கால் அவர் அவைகளைக்குறைத்தும், பொய்யெனமறுத்தும் அவைகளில் பொய்யெனமறுக்கமுடியாதவற்றை கனவென்றும், நினைவென்றும் வெளிரங்கமாய் இவ்வுலகத்தில் நடந்ததில்லையென்றும் மிகுந்த சாமர்த்தியமாகவும் பிரயாசையோடும் சிரமத்னத ஒரு சிறிதும் பாராட்டாமலும் எடுத்துக்காண்பிக்கிறார்.

கற்றுத்தேர்ந்த இம் மௌல்வி இயற்கைசாஸ்திரத்தில் மூழ்கி (வேத) உண்மையை ஸயன்ஸென்னும் பீடத்தின்மீது பலியிட்டுவிட்டார். * அந்த ஸயன்ஸே தற்பொழுது நிறப்ப

---

* எளிய தமிழில் கூறினால், ஸயன்ஸை வேத உண்மைக்கு மேல் உயர்த்தி அதன் தீர்ப்புப்பிரகாரம் நடக்கவேண்டுமென்பது இம் மௌல்வியின் கொள்கை.

மாகாமலும் இன்னும் சீர்திருத்தப்படக்கூடிய நிலைமையிலும் இருக்கின்றது.

மேலும், தீர்க்கதரிசிகளுக்குள்ள தெய்வீகத்தன்மை பொருந்திய அற்புதங்கள் குர்ஆனில் ஜாஸ்தியாகக்காணப்படுகிறதுந் தவிர அதற்கு முன்னிறக்கப்பட்ட வேதப் புத்தகங்களாகிய பழைய புதிய ஏற்பாடுகளிலும் காணப்படுகின்றனவென்றும் மறுக்கமுடியாததும் வெளிப்படையுமான விஷயத்தை அவர் கண்காணாதுபோனது பரிதாபமானதே. (பழய புதிய ஏற்பாடுகள், காலஞ்செல்லச்செல்ல மாற்றியமைக்கப்பட்டதாலும், மற்றும் காரணங்களாலும் திருக்குர்ஆனில் நின்றும் ஓரளவு தூரம் வித்தியாசப்படுகிறது. இக் காரியத்தைப்பற்றி விஸ்தாரமாயெழுதுவது இச்சமயத்தில் வேண்டாததாகும்) திருக்குர்ஆனை உள்ளபடியே உண்மையாக விளங்கவேண்டுமென்று இச்சிக்கும் ஓர் முஸ்லிம் குர்ஆனில் கூறப்பட்டுள்ள அற்புதங்களுக்கு சம்பந்தப்பட்ட இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சிந்தித்துத் தமது ஞாபகத்தில் வைக்கவேண்டும். அவ்விஷயமாவது:- இச்சமயத்திலுள்ள கற்றறிந்த முஸ்லிம் ஒவ்வொருவரும் எஜமானென்று கூசாமற்சொல்லக்கூடிய (ஒவ்வொரு நூற்றாண்டிலுமுள்ள) இஸ்லாமிய மதாச்சாரியரும் (உலமாக்களும்) உண்மை வியாக்கியானிகளும் ஒருமனதாய் குர்ஆனிலுள்ள அற்புதங்கள் உண்மையாக நடந்தனவென்று ஒப்புக்கொள்கிறார்கள். குர்ஆனுக்கு முன்னிறக்கப்பட்ட வேதங்களும் அற்புதங்களை ஆதரிக்கின்றனவென்று அவர்கள் அறிவார்களாதலால், அவர்களிலொருவரேனும் அவ்வற்புதங்களுக்குத் தங்கள் புத்திக்கியைந்தவாறு வியாக்கியானம் செய்து அவைகள் சத்தியமானவை யல்லவென்று கூறமுயன்றார்களில்லை. * ஆகவே, இவைகளைக்கவனிக்கும்போது, முந்தின நபிமார்களுக்கு வேதமளிக்கும்போது ஆண்டவன் ஸன்ஸ் பிரகாரம் ஒழுகாமலிருந்து அப்பால் நமது நபிகள் நாயத்துக்கு வேதமனுப்பியபோது விசாலமான புத்தியுடையவனாயும், ஸயன்ஸ் அறிந்து கொண்டவனாயும் ஆனானென்று நாம் அபிப்பிராயப்பட்டால் அது பொருந்துமோ?

---

* மௌல்வி முஹம்மதலி தாம் இவர்களைவிட நுட்பங்களை அறிந்தவரென்று யோசித்துக்கொண்டார்போலும்!

நுட்பமான ஆராய்ச்சிசெய்வோர்க்கும் நன்றாய் விளங்க வேண்டுமென்ற ஆவலுள்ளவர்க்கும், பைபிளிலுள்ள அற்புதங்களைப்பற்றிய கருத்தை அறிவிக்க சில மாதிரிக்குறிப்புகளை எழுதுகிறேன்.

1. கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதுமில்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை. என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். (1 இராஜாக்கள். 17-ம் அத். 14-ம் வாக்.)

2. இருபது வாற்கோதுமை அப்பங்கள் நூறுபேறுக்குப் போதுமானவையாயிருந்தன. (சுருக்கம்:- 2-இராஜா. 4-ம் அத் 42-43-ம் வாக்)

3. எலியா, தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இருபக்கமாகப் பிரிந்தது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப்போனார்கள். (2-இராஜா. 2 அத். 8 வாக்.)

4. அவர்கள்பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினி ரதமும், அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்து; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிபபோனான். (2-இராஜா. 2 அத். 11 வாக்)

5. விக்கிரக ஆராதனை செய்யப்பட்டோம், என மறுத்த நான்குபேர்களை, நேபுகாத் நேச்சார் கயிறுகளினால் இறுகக் கட்டி எரிகின்ற தீயில்ப்போட்டான், அந்நால்வரும் அந்நெருப்பினுள் கட்டவிழ்ந்தவர்களாக உலாவித்திரிவதையும், அவர்களுடைய தேகத்தில் நெருப்புக்கு எவ்வித சக்தியுமில்லாதிருப்பதையும், அவர்களுடைய தலைமயிரில் ஒன்றேனுங் கருகாமலும் அவர்களுடைய அங்கிகள் மாறுதலடையாமலும் அக்கினிமயம் அவர்கள்மீது செல்லாமலும் இருப்பதையும், அந்நேபுகாத் நேச்சாரும் அவனுடைய தோழர்களும் கண்கூடாகக் கண்டார்கள். (சுருக்கம்:-தானியேல் 3 அத்.)

6. (அச் சமயத்தில்) யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன்

வயிற்றிலே யோனா மூன்றுபகலும், மூன்று இரவும் இருந்தான் (சுருக்கம் யோனா. 1 அத்.)

7. இயேசு தம் கையை நீட்டி அவனைத்தொட்டு: எனக்கு சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான். (மத்தேயு. 8 அத். 3 வாக்)

8. இயேசு மறித்துப்போனவனுக்கு உயிர்கொடுத்தெழுப்பினார். இரண்டு குருடர்களுக்கு பார்வையுண்டாக்கினார். (மத். 9 அத்.)

9. இயேசுகிறிஸ்துவின் அற்புதத்தால் ஐந்து அப்பங்கள் ஐயாயிரம் ஜனங்களுடைய பசியை ஆற்றிற்று. மீதியான துணிக்கைகள் பன்னிரண்டுகூடைகள் நிரம்ப இருந்தன. (மத் 14 அத்.)

இப்பொழுது மேலேசொல்லப்பட்ட பைபிளிலுள்ளமாதிரி அற்புதங்களைக் கவனிக்கும்பொழுது, குர்ஆனில் கூறப்பட்டுள்ள இதேவிதமான, அல்லது இதைப்போலொத்த இயற்கைக்கு மிஞ்சிய அற்புதங்கள் நடந்திருக்குமென நம்புவதில் சிறிதேனும் கஷ்டமிருக்காது. மேலும் குர்ஆனிலுள்ள பல அற்புதங்களுக்கு புகாரி, முஸ்லிம் (ரஹ்) போலொத்த ஆறு ஹதீதுடைய இமாம்கள், கோர்வைசெய்திருக்கும் ஹதீதுக் கிதாபுகள் அத்தாக்ஷி கொடுக்கின்றன, வேண்டிய காலம் நபிகள் நாயகத்தின் கைக்குள்ளிருந்து கற்றவர்களும் ஆகையால் நாம் நம்பக்கூடியவர்களுமான ஸஹாபாக்கள் சில அற்புதங்களை உண்மையென ருஜூப்படுத்துகின்றனர். இவைகளைப்பற்றி பின்னால் என்னுடைய ஆராய்ச்சி கிதாயில் தக்கசமயத்தில் விவரிக்கிறேன்.

மௌல்வி முஹம்மதலி குர்ஆனில் அற்புதங்களை விபரிக்கும்போது அவைகள் சம்பந்தமாக உள்ள நபிநாயகத்தின் ஹதீதுகளுக்கு தமது முதுகைத் திருப்பிவிடுகிறார்; (ம் நம்பிக்கைவைக்கிறாரில்லை.) உதாரணமாக, யூனுஸ் (அலை) மீன் வயிற்றிற்குள் சென்றதையும், இபுறாஹீம் (அலை) உண்மையாகவே கொழுந்துவிட்டெரியும் அக்கினியில் போடப்பட்டாரென்பதையும் நம்பமாட்டேனென்று சொல்கிறார். அவ் வற்புதங்களுக்கு, அரபி அகராதிகளிலுள்ள இரண்டாந்தரமானதும்,

திருக்குர்ஆனின் மூலகருத்திற்கு இணக்கமில்லாததுமான அர்த்தங்கள்கொடுத்து தம்முடைய மனதிற்குத்தோன்றியபடி அவைகளை வியாக்கியானம் பண்ணியுள்ளார். இதை ஆராயும்பொழுது எனக்கு மிகுந்தஆச்சரியம் உண்டாகிறது. அவர் பல வியாசங்களாலும், நோட்டீஸ்களாலும், தாம் நபிநாயகத்தின் ஹதீதுகளை உண்மையாக விசுவாசிப்பதாக நம்மிடம் உறுதிமொழிசெய்கிறார். ஆனால் எந்த இடத்தில் ஹதீதுகளை உபயோகப்படுத்தி அவைகளின்பிரகாரம் நடக்கவேண்டுமோ, அந்த இடத்தில் தமது உறுதிமொழியைமறந்து, அவைகளை மறதியின் இருண்ட மூலைக்குத் துறத்திவிடுகிறார். (ம் புறக்கணிக்கிறார்; அல்லது கைவிடுகிறார்.) என்றாலும் நமது மௌல்வி தமது வழிகாட்டியின் (மிர்ஸாவின்) பாதையைவிட்டுச் சிறிதும்கூட விலகாமலே நடக்கின்றார். அவ்வழிகாட்டியோ, ஹதீதுகள் தம்முடைய நோக்கத்துக்கு விரோதமாயிருக்கின்றனவென்றுகண்டு அவைகளை விசேஷமாக நம்பாமலும், சில சமயங்களில் மிகவும் முக்கியமான ஹதீதுகளை மறுத்து மிருக்கின்றார். ஆனால் தமது விருப்பத்திற்கு ஏதுவாக இருக்கும் இணக்கமான ஹதீதுகளைப் பற்றிப்பிடித்துக்கொண்டு வாதாடுகிறார். எனவே, இக் கூட்டத்தார் இன்ன கொள்கைகள் உள்ளவர்களென்று வரையறுத்துச்சொல்வது முற்றும் முடியாதகாரியமாகும். என்றாலும் நபிகள்நாயகம் உபதேசித்து நம்மிடம்கொடுத்திருக்கும் (நீண்ட காலமாக நிலைநிறுத்தப்பட்ட) இஸ்லாமதத்தைப் பாதுகாக்க வேண்டியது உலமாக்களுடைய பொறுப்பாயிருக்கும். இங்ஙனம் இஸ்லாமிய வேதநூல் முறைதவறிய வழிகெட்ட கூட்டங்களினின்றும் சோதர முஸ்லிம்களை ஆண்டவனருளால் பாதுகாக்கச்சக்தியுள்ள எந்த முஸ்லிமும் அங்ஙனம் செய்ய முன்வருவது தெய்வீக (மதத்திற்கான) ஊழியமாயிருக்கின்றது. விஷயம் இவ்வாறிருக்க, இதுவரை இத் தேசத்தில், பூர்வீக வேதத்தையநுசரிக்கும் ஆங்கில வித்தியாப்பட்டம்பெற்ற முஸல்மான்களிலொருவரேனும், அல்லது ஆங்கிலமறிந்த எந்த முஸ்லிம் பண்டிதரேனும் இப் புதியகூட்டத்தார், (காதியானிகளால்) ஸுன்னத்து ஜமாஅத்தைவிட்டும் வேறுபட்ட பேதகத்தை, இங்கிலீஷ்பாஷையில் வெளிப்படுத்தவில்லையெனக்கண்டு மிகுந்த

மனம் பதைத்த நான் பதினோராம் மணி நேரத்தில் * உண்மைக்கு ஊழியஞ்செய்யும்பொருட்டு எனது அற்பப்பேனவை எடுத்தேன். (எழுதலானேன்)

திருக்குர்ஆனைப்போலவே திரு நபியின் ஹதீதுகளிலும் திடமான நம்பிக்கைவைப்பது இஸ்லாத்தின் உயிராயும், முக்கிய கோட்பாடாயுமிருக்குமென்பதை ஞாபகத்தில் கட்டாயம் வைக்கவேண்டும். ஏனெனில், நமக்குள்ளேற்படும் தாவாக்களிலும், வித்தியாசமான கொள்கைகளிலும் முடிவான தீர்ப்புச்செய்ய, திருக்குர்ஆனையும் அதன் நபியையும்மட்டுமே இறுதியான புகலிடமாய்க்கொள்ள ஆண்டவன் கட்டளையிட்டிருக்கிறான். இதுமட்டு மல்லாமல், மேற்சொன்ன ஆயத்திற்கு அடுத்தவாக்கியத்தில் நபிகள்நாயகந்தான் கடைசி நியாயாதிபதி என ஆண்டவன் அழுத்திக்கூறுகிறான். குர்ஆன் ஆண்டவனுடையவார்த்தைதான் என்று நம்பும் ஒவ்வொரு முஸ்லிமும் ஆண்டவன் நபிநாயகத்தைநோக்கி நேரிலே சொல்வதை ஆழ்ந்த சிந்தையோடு கவனிக்கவேண்டும். அதாவது:—

> **நபியே!** உமது ஆண்டவனின்பேரில் சத்தியமாக, தமக்குள் ஏற்படும் விவாதங்களைத் தீர்ப்பிக்க உம்மையே நியாயாதிபதியாகநியமித்து அப்பால் உம்முடைய தீர்ப்பிற்கும், கட்டளைக்கும் தலைவணங்கிச்செல்லுமட்டிலும் அவர்கள் உண்மையாக விசுவாசிக்கிறவர்களாகமாட்டார்கள். (திருக்குர்ஆன் 5 பாகம். 5–6 பிரிவுகள்பார்வையிடவும்)

மௌல்வி முஹம்மதலி தமது குர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பில் 218–ம் பக்கத்தின் அடியில் 593–ம்நிர். குறிப்பில் நமக்குள்ளேற்படும் விவாதத்திற்கு நபிநாயகத்தின் ஹதீதையே முடிவான தீர்ப்பிற்கு ஆதாரமாக ஆங்கீகரிக்கிறார். ஆனல், குர்ஆனில் கூறப்பட்டுள்ள அற்புதங்களின் கருத்தைப்பற்றியும் நபிநாயகத்தின் சில ஹதீதுகளின் உண்மையைப்பற்றி அவரது மேன்மைபொருந்திய ஆசிரியர் (மிர்ஸா ஸாஹிபு) எவ்விதம் சொல்லுகிறார், அவருக்கும் இஸ்லாமுக்கும் சம்மந்தமென்ன

---

* "பதினோராம் மணிநேரம்:- [Eleventh hour] கடைசிச்சமயம் ஒரு காரியத்தைமுடிக்க ஆயத்தமாயிருக்கவேண்டிய இறுதி நேரம், அந்நேரம் தவறிவிடின் அக்காரியத்தைச் சாதிப்பது அசாத்தியமல்ல.

என்று நிச்சயிக்கும்படியும் அவரை (முஹம்மதலி ஸாஹிபை) அழைத்தோமானால் அவர் காதியானிக் கக்ஷியைப்போலவே புறங்காட்டிச்செல்கிறாரேயன்றி, குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் விரோதமான தமது கொள்கைகளைவிட்டுவிட சிறிதும் பிரியமில்லாததுபோல் காணப்படுகிறார்.

ஒரு பிரிவைச்சார்ந்த வகுப்பினர் அப் பிரிவின் குறுகிய சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடக்கும்படி கெட்டுண்டிருப்பது அன்னாரின் துரதிஷ்டமே. ஆகவே, அப் பிரிவைச்சார்ந்த ஒருவன் அதனால் இடப்பட்ட வரியைவிட்டும் ஒருகால் அடிகூட எடுத்துவைப்பதற்கு அசக்தனாயிருக்கிறான். ஆதலால், எம். முஹம்மதலியும், காதியானியிலுள்ள அவரின் எதிர் கட்சியாரும், ஆண்டவனின் ஏற்பாட்டால் வானலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஈசா நபி (அலை) கியாமநாளுக்கோர் அடையாளமாக பூரணமாட்சிமையுடன் இவ்வுலகத்திற்கு இறங்கும்வரை, கடைசித்தீர்ப்பிற்கு திருநபியவர்களின் ஹதீதுகளை ஆதாரமாக வைக்கவேண்டுமென்ற, ஆண்டவனின்மேற் சொன்ன கட்டளையைச் சிறிதும் சட்டைபண்ணமாட்டார்கள். (சுக்ராப் சூரா. 25 பிரிவு. 12 அத். பார்வையிடவும்.) அப்பால், ஈசா(அலை) அக் காலத்திலிருக்கும் பலாசிபர்களுடைய சந்தேகங்களை அறவே ஒழித்து, எல்லாமதஸ்தர்களையும், மதப்பிரிவினரையும் ஒன்றுசேர்க்கவேண்டியதும், முஹம்மது நபி (சல்) அவர்களால் முன்னுரையாகச்சொல்லப்பட்ட கடமைகளை நிறைவேற்றவேண்டியதுமான விசேஷ கைங்கரியத்தைச் செய்துமுடிப்பார்கள். இந்த விசேஷ கைங்கரியம் அஹமதியர்களின் தலைவராகிய காதியானி மஸீஹாலும், அவருக்குப்பின் அவருடைய ஸ்தானத்தை வகித்த இரண்டு கலீபாக்களாலும், வெவ்வேறு காலங்களில் தாமே மஸீஹென்றும், தாமே வாக்களிக்கப்பட்ட மஹ்தியென்றும் வாதாடிய வெவ்வேறு பேராலும் செய்து முடிக்கப்படவில்லை. * ஆனால், காதியானி மஸீஹ் (மிர்ஸா) ஒரு விஷயத்தில் அவருடைய முன்னோர்களைவிட, மேலானவராயிருக்கின்றார்: அதாவது:-அவரைத்தொடர்ந்தோரை, சமாதானப்படுத்த

* எனவே, இவைகளை ஆராயும்பொழுது இன்னும் ஈசா [அலை] வரவில்லை என யூகித்தல் தவறாகுமோ?

முடியாத இரு பிரிவாய்ப்பிரிந்து ஒருவருக்கொருவர் வாளையுருவிக்கொண்டு * பேட்டிபோடும்படியான நிலைமையில் விட்டுவிட்டு இறந்துபோனதேயாம். அவ்வாறு அவர்கள் போர்முனையிலிருப்பது இராஜீகவிஷயங்களுக்காக அல்ல; ஈமானின் முக்கிய அம்சங்களில் தங்களுக்குள்ளேற்பட்ட வித்தியாசங்களின் பொருட்டே. இப்புத்தகத்தின் வேறோரிடத்திற் கூறியபடி அவ்விருவகுப்பாரில்ஒருவகுப்பார் மிர்ஸாவை முஸ்லிம்சீர்திருத்தகரென்றும் அந்தமட்டில்த்தான் அவரை வாக்களிக்கப்பட்ட மஸீஹென்று கொள்ளவேண்டுமென்றும் சொல்கிறார்கள். அடுத்த வகுப்பாரோவெனில், அவர்கள் மிர்ஸா வாக்களிக்கப்பட்ட மஸீஹாயிருக்கிறதுமல்லாமல் ஆண்டவனின் நபிகளிலொருவராயுமிருக்கின்றாரென்றும் நம்புகிறார்கள். இந்தப்பிளவு (வித்தியாசம்) நாளடைவில் விர்த்தியடைந்து அவ்விருவகுப்பினரையும் தங்கள் தங்கள் பேப்பர்களில் ஒருவரையொருவர் தகாதவார்த்தைகளால் தூஷிக்கும்படியும், மிர்ஸாவின் கூற்றுகளைக்கொண்டு அவரெப்படிப்பட்டவரென்று தீர்க்க ஒருவரை ஒருவர் வாதுக்கழைக்கும்படியும் செய்துவிட்டது. நான் முன் சொன்னபடி அவ்வெழுத்துக்கள், அவ்விரண்டு கட்சிகளுக்கும் சாதகமாயிருக்கின்றன. (ம் ஈரருத்தமுள்ளவை)

இந்தப் புண்ணிய ஆசிரியர் (மிர்ஸா) தமது கடைசி நாட்களில் கோர்வைசெய்து பிரசுரம் பண்ணிய "சஷ்ம-எ-மஹ்ரிபத்" என்னும் புத்தகத்திலிருந்து கீழ் எடுத்தெழுதியிருக்கும் பாகத்தை இப் புத்தகத்தை வாசிப்போர் மிகவும் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இன்னும், மேற்கண்ட இரு கட்சியாருடைய எழுத்து சாமர்த்தியத்தையும், சாமர்த்தியமான போதனையையுஞ் உள் நாட்டிலும், அயல் தேசங்களிலும் பூர்வீக முறை தவறான அவர்களுடைய இஸ்லாத்தைப் பரப்ப எடுக்கும் முயற்சிகளையுங்கண்டு சுன்னத்து ஜமாஅத்துகள் ஏமாற்றமடையாதிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறேன். வைதீக முஸ்

* "வாளையுருவிக்கொண்டு" என்னும் பதமும், அடுத்தவரியிலுள்ள "போர்முனை" என்னும் பதமும் உருவகமாக நின்று அவர்களுக்குள்ளிருக்கும் கடூரமான போட்டியையும், வேற்றுமையையும் காட்டிநிற்கின்றன.

லிம்களே! அவ்விருகூட்டத்தாரினின்றும் அந்தஸ்துள்ள தூரத்திற்கப்பால் நில்லுங்கள். ⁕

மிர்ஸா, மேற்சொன்ன சஷ்ம-எ-மஹ்ரிபத்தின் 82-83வது பக்கங்களில், எல்லாஜாதியாரையும், எல்லாமதஸ்தர்களையும் ஏக மனதாய் ஒன்று சேர்ப்பதற்காக கியாமநாள் சமீபித்தவுடன் மஸீஹை அனுப்புவதாக ஆண்டவன் வாக்களித்தபிரகாரமாகத் தம்மை மஸீஹாக அனுப்பியிருக்கிறாரென்று எழுதியிருக்கிறார். ஆகவே, மஸீஹாவுடைய முக்கியவேலையைப்பற்றி நமது நாயகம் யாதுகூறியிருக்கின்றார்களோ? அதில் சிலதைத்தாம்விசுவாசித்து வருவதாகக் காட்டுகிறார். ஆனால் அவர் அவ்வேலையை முடிக்கச் சக்தியில்லாமல் சென்றுவிட்டார். எனவே, அவரது சொல்லைக்கொண்டே அவர் மஸீஹல்லவென்று தீர்மானிக்கலாம். ஆனால், பைபிளில் சொல்லப்பட்டதும் நாயகமவர்கள் அங்கீகரித்ததுமான ஈசா நபியின் தீர்க்கதரிசனத்தையும் மேற்கண்டதோடு சேர்த்துப் பார்த்தால் மிர்ஸா மஸீஹென்றாவது, நபிகளிலொருவரென்றாவது ஒரு விநாடிகை நேரங்கூட அங்கீகரிக்க முடியவே முடியாது. அத்தீர்க்கத்தரிசனத்தை இங்கே கூறுகின்றேன்.

ஈசாநபிகூறுகிறார்கள்: "நானே ஈசாவென்றுசொல்லி அநேகர்வந்து பலரை ஏமாற்றுவார்கள், ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாருக்கும், ஒரு தேசம் இன்னொருதேசத்திற்கும் விரோதமாய்க் கிளம்புமாதலால், யுத்த முழக்கத்தைக்கேட்பீர்கள். பல இடங்களிலும், பூமியதிர்ச்சிகளினாலும், பஞ்சக்கொடுமையினாலும் துன்பங்கள் உண்டாக்கும் அப்பொழுது ஒருவன் உங்களை நோக்கி, இதோ ஈசா, அதோ ஈசா என்று கூறினால் அவனை நம்பாதீர்கள். ஏனெனில், கள்ள ஈசாக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் தோன்றி ஆச்சரியங்களும், அடையாளங்களும் காட்டி, முடியுமானால் சாமர்த்தியவான்களையுங்கூட தீயவழியிலாழ்த்திவிடுவார்கள். ஆதலால் எனது இந்த முன்னுரையைக் கைப்பிடித்துக்கொள்ளுங்கள்." (மார்க் சுவிசேஷம். 13 அத். தெரிந்தெழுதப்பட்டது) ஆகவே, மேற்சொன்ன தீர்க்கத்தரி

---

⁕ அதாவது: அவ்விரு கூட்டத்தாருடனும் வைதீக முஸ்லிம்கள் எவ்வகைச்சம்பந்தமும் வைத்துக்கொள்ளலாகாது.

சனமானது, கற்ற சில முஸ்லிம்களும், எம். எ. பி, எ. முதலிய வித்தியார்ப்பட்டங்கள் பெற்றவர்களும் எக்காரணங்களால் எம் மாதிரியாக காதியானியின் போலி மஸீஹூக்கு (மிர்ஸாவுக்கு) வழிப்பட்டார்களென்பதை விளக்குகிறது.

ஈசாநபி இனி இப்பூவுலகத்திற்கு உலகக்கடைசி நாட்களில் வருவதைப்பற்றியும், அவர்கள் விவாகம்பண்ணுமலே வானலோகத்திற்கு எடுக்கப்பட்டார்களாகையால் (இனி) அவர்கள் விவாகஞ்செய்து புத்திரபாக்கியமுள்ளவர்களாக ஆகிறதைப்பற்றியும் மக்காவுக்கு (ஸ்தலயாத்திரை) ஹஜ்ஜூ புரிவதைப்பற்றியும், தஜ்ஜாலைக் கொல்கிறதைப்பற்றியும், மற்றுமுள்ள நியமிக்கப்பட்ட வேலைகளைமுடிப்பதைப்பற்றியும், மதீனாவில் மரணமாகி நபிகள்நாயகத்தின் கபுறில் அடக்கப்படுவதைப்பற்றியும், முஹம்மது நபி (சல்) அவர்களின் ஹதீதுகள் என்னசொல்கின்றனவென்பதை என்னுடைய "ஆராய்ச்சி" யிலெழுதுகிறேன். அக்காலத்தில், ஆண்டவன்கிருபையால், ஈசாநபியவர்கள் பரலோகஞ்சென்றதையும், திரும்பி (இப்பூவுலகத்திற்கு) வருவதையும் பற்றி முன்னறிவித்த குர்ஆனும், ஹதீதும் உண்மையானதென்றும், இப்புதிய கூட்டத்தாரின் (காதியானிகளின்) மஸீஹ் சம்பந்தமான கோட்பாடுகள் மிர்ஸாவினால் உத்தேசிக்கப்பட்டவையென்றும் விசுவாசிகள் காண்பார்கள்.

ஓர் விஷயத்தை முடிவுரையாகக் கூறவேண்டியது அவசியமாயிருக்கிறது. அதாவது:— முடிவானதீர்மானத்திற்கு நபிகள் நாயகத்தையே புகலிடமாகக் கொள்ளவேண்டுமென்று கூறுகிற திருக்குர்ஆன், அவர்களிறந்து வெகுகாலமாயும், அழிவில்லாமலும், யாவரும்நம்பவேண்டியதாயுமிருக்கிறதால், நபிகள்நாயகத்துடைய ஹதீதுகளை விசுவாசிக்கவேண்டுமென்பது நமது புத்திக்கு ஒத்ததாகத்தானே இருக்கிறது. அங்ஙனமில்லையென்றால், வேறு உத்தமவழி கிஞ்சித்துமில்லாததுந்தவிர, ஆண்டவன் வாக்களித்திருந்தபிரகாரமாயும் உலகம் சாக்ஷியாயும்ரூபிக்கின்றபடி குர்ஆனிலுள்ள ஒவ்வொருவார்த்தையும் ஆண்டவனுடைய பாதுகாவலிலிருந்து வருகின்றதென்றும் கொள்கை அருத்தமற்றதுமாகும். சர்வபுத்தியும்சர்வவல்லமையுமுள்ள அல்லாஹூத்தஆலா ஹதீதுகளின் ஆவியையும் சாரத்தையும் தனது மேற்பார்

வையில் வைத்துக்கொண்டானென்பதை (நபிநாயகத்தின் மரணத்திற்கப்பால்) நம்பமாட்டோமென்று சொன்னால், மேற்கண்ட தீமைவிளையும். ஆகவே, நாயகவாக்கியங்களை (ஹதீதுகளை) ஆக்ஷேபிப்பது நாயன் வாக்கியங்களை (குர்ஆன் ஆயத்துகளை) ஆக்ஷேபிப்பது போலாமென்று சொல்வதில் சந்தேகமில்லை. முஸ்லிமாயுள்ள ஒரு அரபியும், முஸ்லிமான ஒரு அன்னியனும் அவர்களின்மீது பூரணமான விசுவாசம் வைக்கவேண்டுமே தவிர, அவை முக்கியமற்றவையென்றும் அவசியமற்றவையென்றும் அவைகளை மறுக்கமுடியாது.

இவைகளைப்பற்றிய முழுவிபரங்களை எனது "ஆராய்ச்சி" யில் எழுதவேண்டுமென்று நான் தீர்மானித்திருந்தபோதிலும், இம் "முகவுரை" க்கு முடிவுரையாக இரண்டு விஷயங்களைக் குறிப்பிடுகிறேன். அவ்விரு விஷயங்களும் இக் காதியானிகளின் இஸ்லாம் சம்பந்தமான கொள்கைகளுக்கு அஸ்திவாரக் கல்லாயும், தூணாயுமிருக்கின்றன.

(ஒன்றாவது) நமது நபிகள்நாயகம், வருங்காலத்தில் போலி மஸீஹ்கள் வெளியாவார்களென்பதை முன்குறியாகக்கண்டு தாங்கள் ஈசாநபியவர்களின் மறுவருகையைக்குறித்துப் பேசும்போது எவ்வித சந்தேகமும் நுழைய கிஞ்சித்தும் வழியில்லாதபடி கூறியிருக்கிறார்கள். ஆகையால், நபிகள்நாயகத்தின் தீர்மானத்தை ஒப்புக்கொள்ள மனமில்லாதவனே கண்டோரையெல்லாம் ஈசாவென்று ஒப்புக்கொள்வான். இதுவுந்தவிர, நபிநாயகம், குர்ஆனில் ஈசா அலைஹிஸ்ஸலாத்தைப்பற்றி டஜனுக்கு அதிகமான இடங்களில் கூறியிருப்பதுபோலவே, 'மறியமின் குமாரனாகிய ஈசா' என்று பேசிவந்ததுமன்றி, போலி மஸீஹ்களிலிருந்து உண்மைமஸீஹ் யாரென்று தெரிந்தெடுக்கும்படி சிலகுறிப்புகளும் கூறியிருக்கிறார்கள். அவைகள்பின்வருமாறு:—

(A) மரியமின்மகனான ஈசா உலகஇறுதியில் மறுமுறைதோன்றுவது உலகமுடிவிற்கு முன்னுள்ள இயற்கைக்கு மேற்பட்ட பத்து அடையாளங்களிலொன்றாகும்.

(முஸ்லிம், மிஷ்காத். 4 வால். சுக்றுப்சூராபிரகாரம்)

(B) தேசிக அதிகாரத்துடனும், பூரண மாக்ஷிமையுடனும்

அவர் மறுமுறைதோன்றுவார்.

(மிஷ்காத். 4 வால். புகாரி, முஸ்லிம் இவ்விருவரும் கூறுவது)

(C) அவர் எல்லாக்கூட்டத்தையும். மார்க்கத்தையும் ஒற்றுமைப்படுத்துவார். (ஷை)

(D) வானலோகம் செல்லுமட்டும் விவாகம் செய்யாமலிருந்த விரதத்தை முறித்து இனி விவாகஞ்செய்து குழந்தைகள் பெறுவார்.

(இபுனுல் ஜவ்ஸி, மிஷ்காத். 4 வால்.)

(E) அவர் மதீனமா நகரத்தில் மரணமாகி இரு கலீபாக்களான அபூபக்கர்(ரலி), உமர் (ரலி) இவர்களின் கபுர்களுக்கருகில் நபிகள் நாயகத்தின் கபுறில் அடக்கம்பண்ணப்படுவார். (ஷை)

(F) அவர் மக்கத்திலுள்ள புண்ணிய வீட்டிற்கு (கஃபாவிற்கு) ஹஜ்ஜு செய்வார்.

(முஸ்லிம், தால்கீஸ். 5. வால்:)

இப்பொழுது லாகூரிலும் காதியானிலுமுள்ள அஹ்மதியா கூட்டத்தாரே! உங்களுடைய ஆதாரங்களையும் ஆயுதங்களையுங்கொண்டு முன்வந்து உங்களுடைய தலைவர், மேற்சொன்ன ஆறுவிஷயங்களையும்நிறைவேற்றியிருக்கின்றாரா எனரூபியுங்கள் மேலும், மிர்ஸா ஸாஹிபுக்கு முன் உண்டான போலி மஸீஹுகள் இராஜ்யபாரம்பண்ணி அவ்விஷயத்திலுங்கூட அவரைத் தோற்கடித்துவிட்டார்கள். ஆனால், இவரோ தமக்குநேர்ந்த இடுக்கண்களிலிருந்து தம்மைத் தப்புவிக்க (முஸ்லிமல்லாத)பிற மதஸ்தருடைய கோர்ட்டுகளுக்குச்சென்று அங்கே நியாயம் பெறும்படியாகிவிட்டது. இங்ஙனமாக, சர்வவல்லமையுள்ள நாயன் தனது கிருபையால் குர்ஆன் முன்னுரையிலுள்ள கலிபாக்களுக்களித்த பொது அதிஷ்டமான இராஜீயபதவிக்குக்கூட மிர்ஸா தகுதியில்லையென்று கருதிவிட்டான் எனவே. இவரை வாக்களிக்கப்பட்ட மஸீஹென்றுவது, அல்லது முஸல்மான்களின் கடைசி கலீபாவென்றுவது ஒப்புக்கொள்ளுகிறவன் நிச்சயமாகவே திருமறையாலும், திருநபியாலும் மஸீஹின்

அடையாளங்களெவையென்று சொல்லப்பட்டிருக்குமோ, அவை களை நம்பாதவனாவான், அவ்வடையாளங்களில் ஆறைமேலே கூறியிருக்கிறேன். மீதத்திற் சிலவற்றை எனது ஆராய்ச்சியில் எழுதுகிறேன,

(இரண்டாவது) ஈசா அலைஹிஸ்ஸலாத்தை யூதர்கள் சிலுவைக்கு இழுத்துச்சென்று வாதைப்படுத்தி சிலுவையில் அறைந்து அவரது கரங்களும், கால்களும் தைக்கப்பட்டன வென்று கிறிஸ்தவர்கள் சொல்வதை, அஹ்மதியாக்கூட்டத்தார் இருகட்சியாரும் நம்புகிறார்கள். ஆனாலோ, குர்ஆனும், நபிகள் நாயகமும், எல்லா முஸ்லிம் வியாக்கியானிகளும், அறபியில் பாண்டித்தியம்பெற்ற உன்னத வேதசாஸ்திரிகளும் ஈசா நபி சிலுவைக்குக் கொண்டுவரப்பட்டதையும், முக்கியமாக சிலுவை யில்வைத்து நடந்ததாகச்சொல்லப்படும் கொடிய சித்திரவதை யையும் ஒரே மனதாய் மறுக்கிறார்கள். பின்வரும் ஐந்து குர்ஆன் ஆயத்துகளும், மற்றுமுள்ள ஹதீதுகளும் ஈசா நபியை பங்கப்படுத்தவோ, சிலுவையில் அறையவோ யூதர்களால் சிறிதும் முடியாதென தெளிவாய் ருஜூப்படுத்தி சந்தேகங்களை நிவிர்த்திசெய்கின்றன.

(1) ஈசா இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் கண்ணியம் பொருந்தியவராயும், வல்லாளனுக்கருகிலிருக்கும்படி தெரிந்தெடுக்கப்பட்டவரிலொருவராயும் இருக்கிறார். (ஜூஸ் 3. ரு 13.)

(2) யூதர்கள் ஈசாவுக்கு விரோதமாக சதியாலோசனைசெய்து ஓர் உபாயந்தேடினார்கள்; ஆண்டவனும் ஓர் உபாயந்தேடினான். (எதிரிகளின் எண்ணத்திற்கு மாறாக) உபாயந் தேடுகிறவன் ஆண்டவன்தான். (ஜூஸ் 3. ரு 13.)

(3) "யூதர்கள் ஈசாவைக்கொல்லவுமில்லை, சிலுவையிலறையவுமில்லை. ஆனால், அவருக்குப்பதிலாக இன்னொருவர் அவரைப்போல் ஆக்கப்பட்டார்." (ஜூஸ் 6. ரு 3.)

(4) ஈசாவே யூதர்களின் கொடுமையினின்றும் நான் உம்மை இரக்ஷித்ததை நினைத்துக்கொள்ளும். (ஜூஸ் 7. ரு 5.)

(5) ஈசாநபி (தொட்டிலில்கிடக்கும்போது ஆண்டவனுடைய

ஆதிக்கத்தால்) சர்வவல்லமையுள்ள ஆண்டவன் தாம் எங்கிருந்தபோதிலும் தமக்கு ஆசிர்வாதம் அளித்திருக்கிறானென்று சொன்னார்கள். (ஜுஸ் 16. ரு 5.)

(குறிப்பு) இதில் நிர். 2. மக்கத்தில்வைத்து நபிகள்நாயகத்தை அவிசுவாசிகள் நாட்டைவிட்டுத்துறத்தவோ, சிறையிடவோ, அல்லது கொல்லவோ வேண்டுமென்று சதியாலோசனைசெய்யும்போது இறங்கிய குர்ஆன் ஆயத்தாகும். (திருக்குர்ஆன் 9 ஜுஸ். 18 அத். பார்க்க)

இப்பொழுது திருக்குர்ஆனின், உண்மையான கருத்தை உணர, உண்மையாக முயலும் ஒவ்வொருவருக்கும் இது சரியான சமயமாகும். மேலும், அவர்கள் நபிகள்நாயகத்தைப் பிடிக்க அவர்கள் வீட்டைச்சூழ்ந்துகொண்ட காபிர்களுடைய நோக்கங்கள் ஒழித்துவிடப்பட்டனபோல் யூதர்கள் ஈசா (அலை)மைப்பிடித்து கொடிய அவமானஞ்செய்யவோ, அல்லது சிலுவையிலறையவோ எண்ணிய நோக்கங்கள் அழிவுபடாதிருக்குமோ, என்ற தீர்மானஞ்செய்ய இதுவேதருணமாகும்.

பரிசுத்த குர்ஆனில் மேற்குறித்த ஆயத்து இரண்டே தடவை, மேற்கண்ட இரண்டு நபிமார்களின் விஷயத்தில் பட்டும், கூறப்பட்டதாயிருக்கிறது ஒரே வாக்கியத்தை இரு நபிமார்களுக்கும் சமரசமாய் உபயோகித்திருக்கும்போது வித்தியாசமான அர்த்தங்கள் பண்ணுவது அநீதமும், புத்திக்குறைவுமேயாகும். ஒருவருக்குக் குகையிலும், ஒருவருக்கு வானலோகத்தையும் அஞ்சலளித்தது ஆண்டவனுடைய நாட்டமேயாகும். சதா உயிரைவாங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இருந்த ஜாக்கிரதையுள்ள பகைவர்களிடையே, நமது நபிகள்நாயகம் தப்பியதும், அப்பால் அண்டையிலுள்ள குகையில் அபயம் புகுந்ததும், அக் குகைவாயலில் ஆண்டவன் கட்டளைப்பிரகாரம் சிலந்திப்பூச்சி தனது வலையால் அடைத்ததும், பகைவர்கள்ஒழித்துக்கொண்டவர்களைக்கண்டுபிடிப்பதில்அடைந்ததுக்ககரமான ஏமாற்றமும், ஈசா (அலை) வானலோகத்திற்கு எடுக்கப்பட்டதினின்றும் குறைவான அற்புதமாகாது. ஏனெனில், வானலோகத்திற்கு (ஈசாநபியின்) விரோதிகள் தொடர்ந்துசெல்ல முடியாது உலகில் நபிகள்நாயகத்தின் அடித்தளங்களைப்பின்பற்றிச்

செல்வது எவ்வளவோ லேசானகாரியமாகும். அதுவும் முடியாமற்போய்விட்டதென்றால், அது பெரிய அற்புதமேயன்றோ? ஆனால் ஓர் உண்மைவிசுவாசி கட்சிபேதகமில்லாமலும், பக்ஷபாதகமில்லாமலும் இருந்தால் ஓரற்புதம் மற்றொன்றைப்பார்க்கிலும் மேல்கீழெனக்கருதாமல் இவ்விரண்டிலும், ஆண்டவனுடைய புத்திதீக்ஷண்ணியத்தைத் தெளிவாய்க்காண்பான். திருக்குர்ஆன் இவ்விரண்டிற்கும் ஒரே வாக்கியத்தைக்கொடுத்திருப்பதுதான் அதற்குக்காரணம். வாசிப்போர் தமது திருப்திக்காக மிஷ்காத் 4 வால். அற்பதங்களின் அத்தியாயம் என்னும் பிரிவில் திருநபியின் தப்பியோடுதலென்பதை வாசிக்கலாம்.

நிஸாயி, அப்து இபுனுஹமீது, இபுனுஜரீர், இபுனுமன்ஸூர் முதலானவர் பின்வருமாறு கூறுகின்றனர். (ராவி ஹஸரத் இபுனு அப்பாஸ்) ஈசாநபியவர்களிருந்த இடத்தை யூதர்கள் வளைந்துகொண்டபோது நபியவர்கள் தங்கள் சிஷர்களைநோக்கி யார்தங்களுக்குக்காக தங்களுடையவேஷம்பெற்று சிலுவையில் அறையப்பட பிரியமுள்ளவரென்றுகேட்க, அதிலொருவர் சம்மதித்ததின்பேரில் அவரை ஈசாநபியவர்களின் ரூபமாக்கப்பட்டது என்று சொன்னார்கள். அப்புறம் அந்த யூதர்கள் அவ்விடத்தினுள் நுழைந்து (ஆண்டவன், ஈசா அலைஹிஸ்ஸலாத்தை மேல் எடுத்துக்கொண்டபின்)மேற்சொன்ன சிஷரைப்பிடித்துக்கொண்டனர். நமது நபிவிஷயத்திலுங்கூட இதேமாதிரி சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. ஒருநாள் தம்மை பகைவர் வளைந்துவிட்டார்களென்றவிஷயத்தைக்கண்ட நபிநாயகம் ஹஸரத்அலியைத் தங்கள் படுக்கையில் படுத்து வேண்டுமானால் தங்களுக்காக அவருடைய உயிரையிழக்கும்படிவைத்துவிட்டு தாங்களும் அபூபக்கர்(றலி) அவர்களும்எவ்விதமாகவோ,குகையைநோக்கி ஒழிக்கப்போனார்கள். இந்த இரண்டு நபிமார்களின் பகைவருடைய எண்ணங்களை பாழாக்கப்படுமென்றுகூறும், மேற்சொன்னவாக்கியம் இருவிஷயங்களிலும் ஒத்திருப்பதுமல்லாமல் நமது நாயகம் தங்களது கபுறில் அபுபக்கர் (சித்தீக்) உமர் (ரலி) இவர்களுக்கருகாமையாக ஈசாநபியவர்கள் புதைக்கப்படுவார்களென்று சொன்ன அதிசயத்தை விவரிக்கின்றது. (உலகத்தினிறுதியில்) ஈசாநபியவர்களால் உன்னத உச்சியில் இருக்கப்போகும் இஸ்லாமுக்காக அவ்விரு கலிபாக்களும் மிக உழைத்துள்ளார்.) ஆனால்

நமது காதியானி மஸீஹோவெனில், இவ்விதபாக்கியத்திற்குத் தகுந்தவரல்லரென்று ருஜூப்படுத்தியது வருந்தத்தக்கதே. அவர் (மிர்ஸா) உயிரோடிருக்கும்போதும், இறந்தபிற்பாடும் கிறிஸ்தவமதம், கோபுரத்தின் உச்சியிலும், இஸ்லாமியதேசங்கள், கிறிஸ்தவர்களுடைய ஆளுகைக்குள்ளும் இருக்கிறதைக் கண்கூடாக்காண்கிறோம். இப்படியிருந்தும் மிர்ஸாகுலாம் அஹ்மதின் சிஷர்கள் அவரை மஸீஹென்றும் அவர் கிறிஸ்தவர்களை வாய்ச்சாதுர்யவழக்குகளால்தோற்கடித்துவிட்டாரென்றும் சொல்லுவதற்கு வெட்கப்படுகிறார்களில்லை. ஆனால், அச்சிஷ்யர்கள் குர்ஆனின் காலத்திலிருந்து, இதுமட்டும் கிறிஸ்தவமதத்தை வாய்ச்சாதுர்ய வழக்குகளால் முறியடிபபது வழக்கமாயிருப்பதையும், கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கைகளை தப்பென்று காட்டியிருக்கின்ற முஸ்லிம் ஆலிம்களால், கோர்வைசெய்யப்பட்ட புஸ்தகங்கள் கோடிக்கணக்காயிருப்பதையும் அறியமாட்டார்கள்போலும்.

(குறிப்பு) நிர். 3. இந்த ஆயத்திற்கு நாம் கொடுத்திருக்கும் மொழிபெயர்ப்பானது, 2 நிர். ஆயத்தின் கருத்திற்கு ஒத்திருக்கிறதுமன்றி, அரபி இலக்கணத்திற்கும், அரபி அகராதி (முப்பிராதாத்திராகிப்) க்கும் பொருந்தியுள்ளது மேலும், இதை தற்போதுள்ள உர்து பார்ஸிமொழிபெயர்ப்புகளும், வைதீக முஸ்லிம் பண்டிதர்கள் எழுதியுள்ள அரபி வியாக்கியானங்களும் ஒன்றுபோல் ஆதரிக்கின்றன. பர்னபாஸின் சுவிசேஷமும் இதை அங்கீகாரஞ்செய்கிறது. கிறிஸ்தவர்கள் இதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஏனெனில், அவர்களுடைய பாவநிவிர்த்திக்கொள்கை * தப்பென்று ருஜூவாகிறது. மிர்ஸாவும், அவருடையசிஷ்பர்களுமோவெனில், அவர்கள் ஈசா (அலை) சிலுவையிலறையப்படவில்லையென்பதொன்றைத்தவிர, இதர விஷயங்களில் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்துகொள்கின்றனர். இவ்

* கிறிஸ்தவர்கள் ஆதத்தின் (அலை) பாவத்தால் உலகத்தில் பாவம் உற்பத்தியானதாயும் அப்பாவத்திலிருந்தும் உலகத்தை விடுவிக்க (தேவகுமாரனான) ஈசா உலகத்திலவதரித்து ஜனங்களுக்காக தாமே தம்மை பலியிட்டுக்கொண்டாரென்றும் நம்புகின்றனர். ஆதலால், நாம் ஈசாநபியார்க்கவில்லையென்று கூறுவோமாயின் அவர்கள் நம்மை அவிசுவாசிகளெனச்சொல்வார்கள்.

விதஞ்செய்து காதியானிகள் கிறிஸ்தவரின் பாவநிவிர்த்திக் கொள்கையை வேறுடன் பிடுங்கிவிடலாமென்பது அவர்கள் தம் நோக்கம். ஆனாலோ, நமது திருக்குர்ஆனும், திருநபியும், ஆலிம் உலமாக்களும் கிறிஸ்துவை, யூதர்கள் சிலுவையில் அறையக்கைப்பற்றவேயில்லையென்று மறுத்து, அதனால் பாவநிவிர்த்தி பொய்யென்றுகாட்டியிருப்பதைக் காதியானிகள் கவனியாமல் கிறிஸ்தவரின் கொள்கைகளை அநுசரித்தும், சொந்தஅபிப்பிராயங்களாலும், வழிதவறிவிட்டனர். இதை வாசிப்போர் இன்னும் ஒருமுறை நிர். (2) (3) குறிப்புகளை கவனமாய் வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மிர்ஸா ஸாஹிபும், அவரைத்துயர்வோரும், ஈசா (அலை)மின் மரணத்தைப்பூரணமாக ஒப்புக்கொண்டுள்ளார். இந்தக் கோட்பாட்டை குர்ஆனாவது, ஹதீதுகளாவது, எந்த இமாமாவது அநுசரிக்கவில்லை. ஆனால், மஜ்மஉல் பிஹார், என்னும் கிதாபு இமாம்மாலிக் (றஹ்) அவர்கள் அநுசரித்ததாகக்கூறுகிறது. ஆனால், அக் கிதாபு, அந்த இமாம் அவ்வாறு சொன்னார்களென்று, கூறியவர்களுடைய நாமத்தைக்கூறவுமில்லை. இமாம்மாலிக் அவர்களாவது, அவர்களுடையசீஷராவது எழுதியுள்ள கிதாபுகளில் அவ்விதம் காணவுமில்லை. இதுதான்போகட்டும் மாலிக் (றஹ்) அவர்களைத்துயர்ந்துள்ளவர்களில் எவரேனும் ஈசாநபி இறந்துவிட்டார்களெனச் சொல்லுகிறார்களா? அதுவுமில்லை. இதுவும் தவிர, மேற்குறித்த கிதாபின் ஆசிரியர், இமாம்மாலிக்கின் உள்நோக்கத்தையும், உட்கருத்தையும் தெளிவாய் எடுத்துக்காண்பிவிக்கிறார். (வால் 1. ப 286) காதியானிகள் தாங்கள் அதைப் பகிரங்கப்படுத்தினால், தாங்கள் அவமானத்திற்குள்ளாகவேண்டியதிருங்குமென்று, அதை வெளிப்படுத்தப்பயப்படுகின்றனர் *

* ஹஸ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்கள் மரணித்துவிட்டதாக நம்புகிறார்களென்று காதியானிகள் பொதுஜனங்களிடம் கூறி எமாற்றுகிறார்கள். இதுமட்டுமல்ல, ஷெய்கு முஹியித்தீனிபுனு அறபியும், இவ்வாறு கூறுகிறார்களென்றும் செப்புகிறார்கள், காதியானி நண்பர்களுக்கு பொய்கூறுவதும், புரட்டுவதும், சுன்னத்தாகவிருப்பதால் அவர்கள் கூறும் எவ்விஷயங்களையும் பரிசீலனை செய்யாமல் நம்புவது மோசத்திற்கிடமென்பதை முஸ்லிம்கள் உணரவேண்டும்.

மிர்ஸாவிற்கும் அவருடைய கூட்டத்தாருக்கும், எவைக ளாவது தங்களுக்கநுகூலமாயிருந்தால், அவைகள் பெலவீன மான கட்டுக்கதைகளாயிருந்தாலுங்கூட அவைகளை சாங்கோ பாங்கமாக ஆதாரமாக வைத்துக்கொள்வது வழக்கமாய்விட்டது பரிசுத்த குர்ஆனுக்கும், நபிநாயகத்திற்கும், சஹாபாக்களுக் கும், முஸ்லிம் உலமாக்களில் பெரும்பான்மையோர்க்கும், சூபி யாக்களனைவோர்க்கும் ஒவ்வாதபடி இமாம் மாலிக்கவர்கள் சொன்னார்களென்ற ருஜுப்படுத்தப்படாத அபிப்பிராயத்தை நம்ப நமக்குக்காரணமில்லை மேலும், மற்ற இமாம்களைவிட, ஜாஸ்தியான துயர்ந்தோர்களையுடைய இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்கள் தங்களுடைய கீர்த்திவாய்ந்த 'பிக்குஹ் அக்பர்' என்ற கிதாபிலும், ஹஸ்ரத் அப்துல்காதிர் ஜைலானி தங்க ளுடைய குன்யா என்ற கிதாபிலும், ஈசா (அலை) மின் மறுவரு கையை நம்பவேண்டியது ஒவ்வொரு முஸ்லிம்மீதும் கடமை யென்று தாங்களும் விசுவாசிக்கிறதுமட்டுமன்றி, பிறருக்கும் எடுத்துக்காண்பிவித்திருக்கின்றனர்.

புகாரி முஸ்லிம் இவ்விருவரும் பேர்போன மிஷ்காத் என் னும் கிதாபின் நாலாவது வால்யம் இபுனுசையாத் என்னும் அத்தியாயத்தில் ஓர் முக்கியமான சரிதை கூறியிருக்கிறார்கள்; அச்சரிதையானது, ஈசா (அலை) இறந்துபோகவில்லையென்றும் (உண்மையை) வேதஉண்மையைப்பற்றி முற்றிலும் சமுசயிப் பவனுக்கும் உணர்த்திவிடும். அச்சரிதையாவது, இபுனுசை யாது என்பவர் தீர்க்கதரிசனத்தால் அறிவிக்கப்பட்ட தஜ்ஜா லுடைய குணக்குறிகளில் சிலவற்றை உடைத்தாயிருப்பதைக் கண்ணுற்ற ஹஸரத் உமர் (ரலி) நபிநாயகத்தினிடத்தில் அவ ரைக்கொல்ல உத்தரவுகேட்டார்கள்; நபிகள்நாயகம், அவர் உண்மையில் தஜ்ஜாலேயாயின், அவரைக்கொல்லத்தகுந்தவர் உமரல்லவென்றும், அவர் தஜ்ஜாலேயில்லாதபக்ஷத்தில் அவ ரைக்கொல்லுதல் அவர்களுக்குக்கௌரவமாகமாட்டாதென்றும் சொன்னார்கள். இச்சரித்திரத்தை அதே அதிகாரத்தின் இறு தியில் திரும்பவும் சொல்லப்பட்டிருக்கிறது. நபிநாயகம் கூறி னார்கள், ஓ உமரே! தஜ்ஜாலைக்கொல்ல நீர் தகுந்தபாத்திரவா னல்லர்; அவனைக்கொல்ல கட்டளைபெற்றவர் மறியம் அவர்

களின் குமாரரான ஈசாதான். நீர் கேட்கிறவர் தஜ்ஜாலில்லை யானால், அப்பாதுகாக்கப்பட்டவரைக் கொல்லாதிருத்தல் நல மாகும். அச்சமயத்தில் நபிகள்நாயகத்தின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அன்னாரின் சஹாபாக்களில் ஒருவரே னும், மறியமின் மகன் இறந்துபோய்விட்டதால், தஜ்ஜாலைக் கொல்ல எவ்வாறுகூடுமென்று சொல்லவில்லை. மேலும், இவ் விர்த்தாந்தமானது, தஜ்ஜாலைக்கொல்வது ஈசா (அலை) மின் சிறப்புப்பெற்றவேலைகளிலொன்று, என்று நபிநாயகமும், அவர் களின் தோழர்களும் விசுவாசித்தார்களென்பதை மறுப்பதற் கிடமில்லாமல் விளக்குகிறது. இன்னும் நமது நபியவர்கள் தஜ் ஜாலுடைய குணநடவடிக்கைகளை தெளிவாகக்கொடுத்திருக்கிற தால் அன்னவனைக்குறித்து ஒரு சந்தேகமும் உண்டாகாது. எனவே, கிறிஸ்தவ்மதப்பிரசாரகர்தான் தஜ்ஜாலென்று வாதிக் கும் மனிதன். நபிநாயகத்தின் ஹதீதுகளைத் தடித்தனமாய் மறுக்கின்றவனென்பதில், கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. நமது நாயகமும், அவர்களுடைய சஹாபாக்களும் தங்களுடைய கோட்பாடுகளுக்கு விரோதமான கோட்பாடுகளுள்ள, கிறிஸ் தவர்களை எத்தனையோதரஞ் சந்தித்திருந்தும் அவர்களைத் தஜ் ஜாலென்று கூறுமலிருந்தது அவர்களுடைய புத்திவிசாலக் குறைவோ; நிச்சயமாக நமது நபியவர்கள் தஜ்ஜாலை ஒருமை யாக உபயோகித்து சந்தேகநிவிர்த்திக்கு வேண்டிய அடையா ளங்கள் அறிந்திருந்தும், சிற்சிலர் உலகத்தை ஏமாற்றவேண்டி அதை மறுத்துவருகிறார்கள். ஆனால், தங்கள் மரணத்திற்குப் பின், முப்பது-நாற்பது போலித்தீர்க்கதரிசிகள் உண்டாவார்க ளென்று முன்னறிக்கையாக உணர்ந்து முஹம்மது நபி (சல்) அவர்கள் தஜ்ஜால் எனும் பதத்தைப்பன்மையில் உபயோகித் திருப்பது நிச்சயமே. மதனி வாழ்க்கையின் * ஆரம்பத்தில் திருநபியும், சஹாபாக்களும் தஜ்ஜாலைப்பற்றி சந்தேகத்திலிருந் தனர். ஆனால், அடுத்தாற்போல் குறிப்பிட்ட தஜ்ஜாலைப்பற்றிய முழு அடையாளங்களும் அவர்களுக்கறிவிக்கப்பட்டது எனி னும் அவர்களுடைய ஹதீதுகள், அவர்கள் உரைத்தபிரகாரம் ஒழுங்காகக்கோர்வைசெய்யப்படவில்லை. ஆகையால், அப்துல்லா சக்டாலவி, போன்ற சில முஸ்லிம்கள் ஒவ்வொன்றுக்கும் உள்ள

---

* அதாவது மதீனாவில் வாழ்ந்ததைக் குறிக்கும்.

வெவ்வேறு நுட்பங்களை அறியச் சக்தியற்றவர்களாய் நாயக வாக்கியங்களின் கருத்தைக் கற்றுக்கொள்ளும் அவசியத்தை முற்றிலும் மறுக்கின்றார்கள். நமது நபியவர்கள், நிறப்பமான ஒரு நபியாகவும், அவர்களால் உபதேசிக்கப்பட்ட இஸ்லாமார்க்க மானது, நிறப்பமுள்ளமார்க்கமாயும் இருக்குமாயின், மறியமின் குமாரனான ஈசாவின் வருகையைப்பற்றியும், குறித்ததஜ்ஜாலைப் பற்றியும் உள்ள விஷயத்தை சந்தேகத்திலும், இரகசியத்திலும் விட்டுவிட்டு தங்களைத்துயர்ந்தவர்களினின்றும் ஒருவரை, அக் குறைகளை நிவிர்த்திக்கும்படி வைத்துவிட்டு நமது நாயகம் போனதாய் யூகித்தல் பொருந்தாது. நமது நபிநாயகம் இந்த விஷயங்களைச் செவ்வனே விவரிப்பதில் விசேஷ சிரமம் எடுத் திருப்பதால் உண்மையான மஸீஹை மற்றப்போலித்தனமான வேஷம்போட்டுள்ள கள்ளத்தீர்க்கத்தரிசிகளினின்றும் பிறித் தெடுக்கவும், குறித்த தஜ்ஜாலை மார்க்கப்புரட்டுகளால் ஏமாற்றி வரும் மற்றதஜ்ஜால்களில்நின் றும்பிரித்தெடுக்கவும், போதுமான ஆதாரங்களைவிடுத்துப் போயிருக்கின்றார்கள். மிஷ்காத்தின் நாலாவது வால்யத்தில், தஜ்ஜாலின் வருகையைக் கியாமநாளுக் குமுன்னுள்ள இயற்கைக்கு மேம்பட்ட (10) பத்து அடையா ளங்களில் ஒன்றாக முஸ்லிம் (ரஹ்) எழுதியிருப்பதோடு, கிறிஸ் தவ உலகம் முழுதும் நினைக்கவோ, அல்லது செய்யவோ முடி யாத ஆச்சரியமான அற்புதங்கள் செய்வானென்றும், ஒப்புக் கொள்கிறார்கள். (மிஷ்காத் வால் 4. தஜ் அத்.)

காரியம் இப்படியிருக்க, மிர்ஸாவும் அவரைத் துயர்ந்தவர் களும் நபிகள் நாயகத்திற்கு தஜ்ஜாலைப்பற்றிய முழுவிபரங் களும் அறிவிக்கப்படவில்லையென்று தங்களுடைய பிரபந்தங் களில் வெட்கமில்லாது கூறுகின்றனர். இக் கூற்றை யாம் வேறு விதமாகச்சொல்லப்புகின், அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தஜ்ஜால் இவர்களின் அடையாளங்களை துய்ய நபியைத்துயர்ந்த வர்களினின்றும் மறைத்து அவர்களை வழிகெடும்படிசெய்து பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கப்பால் பஞ்சாப்தேசத்தில், காதியானியில் அவதரித்த மிர்ஸாவுக்கு வெளிப்படுத்தினு னென்று அர்த்தப்படுகிறார்கள்.

பைபிளின் ஆதாரத்தைக்கொண்டு மிர்ஸா ஸாஹிபு யூதர் கள் எலிஜா, மறுவருகையைப்பற்றி சந்தேகங்கொண்டுள்ளார்க

ளென்றும் அப்பால் கிறிஸ்துவானவர் அவர்களின் பத்தியில் வாசஞ்செய்யும் யோவான்தான் எலிஜா'வென்றும் அறிவித்த தாகக்கூறுகிறார். ஆனால், திருக்குர்ஆனிற்காவது, நமது நாயகத்தின் ஹதீதுகளுக்காவது விரோதமாயிருக்குமாயின் மிர்ஸாவின் விபகாரத்தையாவது, பைபிளின் கதைகளையாவது விசுவாசிக்க நாம் கடமைப்பட்டுள்ளோமல்ல. ஆகையால், மேற்கண்ட கதை மறுபிறப்பைப்பற்றி விசுவாசிக்கும்படி இஸ்லாம்களைத் தூண்டுவதால் அதை முஸ்லிம்கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது என்று மறுத்துவிடவேண்டும். மிர்ஸாவும், அவரைச் சேர்ந்தபேதைகளும், இஃது போலொத்த முஸ்லிமுக்கடாத கொள்கைகளை ஏற்றுக்கொண்டால் கொள்ளட்டும்; திருநபியவர்கள் தங்களுடைய உம்மத்துகள் முந்திய நபிகளின் உம்மத்துகளைப்போல் எல்லோரும் ஒன்றுபோல் சீரானபாதையை விட்டும், விலகிவிடமாட்டார்களென்றும், நிச்சயமாக ஒருவகுப்பார் எவராலும் வழிதப்பி நடத்திச்செல்லும் அபாயத்திற்குப் புறம்பான பாதையில் திடமாக இருப்பார்களென்றும், நற்செய்திகளாக நமக்குச் செப்பியிருக்கின்றார்கள். (புகாரி முஸ்லிம் இவர்களால் கூறப்பட்ட மிஷ்காத் நாலாவது வால்யம் கடைசி அத்தியாயம்)

மிர்ஸா ஈமானைப்பற்றி போதிய அறிவில்லாமலோ அல்லது ஈமானில் சிறிதும் உறுதியில்லாமலோ வாக்களிக்கப்பட்ட மஸீஹைப்பற்றியும், குறிக்கப்பட்ட தஜ்ஜாலைப்பற்றியும் மற்ற முஸல்மான்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்கள் பேதகமெனக் கூறி மறுபிறப்புக்கொள்கையை விசுவாசிக்கும்படி அழைக்கின்றார். மேலும், நபிகள் நாயகத்தால் விளங்கிக்கொள்ள முடியாத சிக்கலான மேற்சொன்ன விஷயங்கள் தமக்கே முழுதும் வெளியாக்கப்பட்டதென்றும் அகங்காரத்தால் தம்மை உயர்த்தி பெருமைபாராட்டுகின்றார்.

இதனைவாசித்து வருபவர்கள் மிர்ஸா தாம் அடிக்கடி நடித்தவைகளில் சத்தியமாகவிருந்தாராவென்பதையும், துய்யநபியை நிறப்பமாய் நேசித்து துயர்ந்தாராவென்பதையும் இப்பொழுது தெரிந்து தீர்ப்புச்செய்யலாம். முஹமதுநபி (சல்) அவர்களைத் தவிர மற்றஎல்லா முன்னுள்ள நபிமார்களுக்குமழிக்காத விசே

ஷித்த கௌரவத்தைத் தமக்குக்கொடுத்து தம்மை மேன்மைப் படுத்த ஆண்டவன் இசைந்துள்ளான் என்று மிர்ஸா ஸாஹிபு தமது வசனகாவியங்களில் கூறியிருப்பதை அடிக்கடி வாசிக்க லாம். ஆனால், இவ்விதம் கூறிய மிர்ஸாவே (வேறோரிடத்தில்) தமது தனிப்பாவனையை முழுதும் மறந்து, நபிகள் நாயகம் அறிந்துகொள்ளாத சில விஷயங்களின்கருத்துகளைத் தாம் விவ ரிக்கும்படி தமக்காக விடப்பட்டிருக்கிறதென்று கூறி நபிகள் நாயகத்தின் நிகரற்ற கௌரவத்தைத்தாக்கியும், குறைத்தும் எழுதியிருப்பதை வாசித்த எவரும் இடிவிழுந்ததுபோல் மிகுத மாக அதறுவர். மிர்ஸா ஸாஹிபின் வார்த்தைகள் ஒன்றற் கொன்று நேர்மாற்றமாயிருப்பதை எனது ஆராய்ச்சியில் எடுத் துக்காண்பிவிக்கிறேன்; அதற்குக்காரணம் அவர்மனத்திலுள்ள ஒரு வியாதிபோலும், * அதனால், அவர் மிகவருந்தி தமது சிஷ்யர்களிடமிருந்து வசூலித்த பெருந்தொகையை அவருடைய முதல் கலீபாவான பேர்பெற்ற ஹக்கீம்நூருத்தீனுடைய மேற் பார்வையில் விசேஷவிலைபெற்ற ஔஷதங்கள் தயார்செய்வதில் செலவுசெய்தார். இப்படியிருந்தும் அவரைத்துபார்த்தவர்கள் மாயவலையிற்சிக்கியவர்களாய் அவருடைய வாக்கியங்களை குர்-ஆன் (வேத) வாக்கியங்கள்போல் அங்கீகரிக்கின்றனர் அவ ருடை இஸ்லாமுக்கு மாறானகொள்கைகள், அவருடைய சீஷர் களுக்கு எவ்வளவு உன்னதமாயும்தெளிவாயுமிருந்தபோதிலும் அவைகளை வைதீக முஸ்லிம்கள் ஒருக்காலும் அநுசரிக்கமாட் டார்கள். மிர்ஸா தமது சீஷர்களைத் தமக்கு விரோதப்பட்டுள்ள எழுத்துகளைவாசிக்கக்கூடாதென உபதேசித்திருப்பதால், இப் புதியகூட்டத்தார் தங்களுடையகொள்கைகளுக்கு எதிர்உரையா யும், துவேஷமில்லாதுவாசிப்பவருக்கு நபிகள்நாயகம் உபதேசித் தும் விடுத்தும்போன இஸ்லாமிய உண்மையின் ஹதீதுகளைப்பற் றிப்போதிய அறிவைக்கொடுக்கக்கூடியதாயும் பிரசுரிக்கப்படும் புத்தகங்கள் பத்திரிகைகளிவைகளின் ஆசிரியருடன் தர்க்கஞ் செய்யுமிடத்து இவர்களுக்கு சதா அபஜெயமேகிடைக்கும்.

இப்பொழுது இந்த முகவுரையில் எனது வைதீக முஸ்லிம்

---

* மிர்ஸா ஸாஹிபு தமது நூல்களில் அடிக்கடி தமக்கு வியாதிகள் ஏற்பட்டுக்கொண்டிருந்ததென்று வரைந்திருக்கிறார். அன்றியும் சில சந்தர்ப்பங்களில் பித்தம் மேலிட்டதாகவும் தெரிகிறது.

சகோதரர்களுக்குத் தற்சமய உபயோகத்திற்குப்போதுமான விஷயங்களையும், மஸீஹாயும், காதியானியின் நபியாயும், இந்துக்களுக்குக் கிருஷ்ணசுவாமியாகவும், இருக்கும் மிர்ஸாவின் சிஷ்யர்கள் தௌபா (மனந்திரும்புதல்) செய்யவேண்டியதற்குமான ஆலோசனைசெய்வதற்குவேண்டிய விஷயங்களையும் எழுதிவிட்டேன். இனி முன்னொருதரம் கூறியிருக்கும் குர்ஆனஆயத்தை மறுமுறையொருதடவை கூறிமுடித்துவிடுகிறேன்.

"ஆனால் இல்லை ஓ நபியே! உமது ஆண்டவன்பேரிற்சத்தியமாக தங்களுக்குள்ளேற்படும் பேதங்களுக்குத் தீர்ப்புச்செய்ய அவர்கள் உம்மை நியாயாதிபதியாகத்தெரிந்துகொள்ளும் வரை அவர்கள் உம்மை விசுவாசிகளென்று சொல்லப்படமாட்டார்கள் இன்னும் அவர்கள் நீர் செய்யும் தீர்ப்பைக்கொண்டு மனம் சஞ்சலப்படாமல் வணக்கமாய்ப்பெற்றுக்கொள்ளக்கடவர்"(குர்ஆன்)

"ஷேக் குலாம் ஹைதர்"

மேற்கூறிய முகவுரைக்கர்த்தாவால்,
எம். முஹம்மதலி எம்.எ., எல். எல். பி., என்பவருக்கு,
எழுதப்பட்ட ஓர் பகிரங்கமான கடிதம்.

நேர்வழியைத் தொடர்பவன்மீது ஆண்டவனின் சமாதானம் உண்டாவதாக. நீர் உம்முடைய "குர்ஆனின் ஆங்கில மொழிபெயர்ப்பும், வியாக்கியானமும்" என்னும் புத்தகத்தில் அநேகவிடங்களில் நம்பத்தகுந்த நாயகவாக்கியங்களால் கூறப்பட்டும், முஸ்லிம் வியாக்கியானிகளால் தொடர்ச்சியாய் பராமரிக்கப்பட்டும் வந்த சில குர்ஆன் ஆயத்துகளின் கருத்துகளைக் கவிழ்த்தும், மறுத்தும் இருக்கின்றதைக் கண்கூடாய்க்காண்கிறேன்.

நீண்டகாலமாக நிலைநிறுத்தப்பட்ட கருத்துகளில் உமக்குண்டான நிரப்பமற்ற அறிவாலும், பெலமற்ற விசுவாசத்தாலும் நாயகத்தின் ஹதீதுகளை மறுத்து ஜனசமுகத்தை வழிகெடுத்துவிட்டீர்; உம்முடைய மொழிபெயர்ப்பும், வியாக்கியானமும் என்னும்புத்தகங்களில் ஒன்றேனும் உலகத்திலிருந்து வரும்பக்ஷத்தில் உமதுஇஸ்லாம் இத்தன்மையென்றும், ஹதீதுகளில் உமக்கிருக்கும் பக்தி இவ்வளவென்றும் காட்டுகிறதற்கு

போதிய சாக்ஷியாக நிற்கும் இந்நிலைமையில் நீர் இம்மையிலும், மறுமையிலும் கொடியபாவத்திற் குள்ளாயிருக்கின்றீர் மனம் திரும்புவதற்கு (தௌபாவிற்கு) வாயில்கள் இன்னும் திறக்கப் பட்டிருப்பதால், நீர் மனம் திரும்புங்காலம் கழிந்துபோகுமுன் உமது குற்ற உணர்ச்சியை பிரசுரித்துவிடும்படி உமது முஸ்லிம் சகோதரனை நான் வெகு தாழ்மையாய் வேண்டிக்கொள் கிறேன்.

உமது முஸ்லிம் சகோதரன், ஷேக் குலாம் ஹைதர்,
(Retd) ஹெட்மாஸ்டர், எடிக்கேஷனல் டிபார்ட்மெண்டு,
சர்கோதா. (பஞ்சாப்)

## ஓர் போதுஜன எச்சரிக்கை.

வாசிப்போருக்குப் பின்னால் ஆங்கிலத்தில் வெளிவரும், எனது ஆராய்ச்சியைப்பற்றிய ஒரு கருத்தை உண்டுபண்ண நான் "அஹ்லஹதீஸ்" அமரித்ஸாரில் இரண்டு பாகமாக (1-10-20) (8-10.20) உர்துவில் வெளியிட்டிருப்பதைப்பார்க்கும் படி வணக்கமாய்க்கேட்டுக்கொள்கிறேன். அதில் நாயகவாக்கி யங்களை விசுவாசிப்பவராய்ச்சொல்லிய முஹம்மதலி எவ்வளவு தைரியமாய் அவைகளைப் பொய்யாக்கியிருக்கிறாரென்பதை விவ ரித்திருக்கிறேன்; அநேக உபமானங்களிருந்தபோதிலும் அதில் குர்ஆனிலிருந்தெடுக்கப்பட்ட மூன்று உபமானங்கள் மாத்திரம் குறிப்பிட்டிருக்கிறேன். (1) அவிசுவாசிகள் இபுறாகீம் (அலை) மை பிரத்தியக்ஷமாகத் தீயிற்போட்டதும், அவர்கள் அதினின் றும் யாதொருபழுதும் அடையாமல் காக்கப்பட்டதும். (2) ஈசா (அலை) அவர்கள் பேசமுடியாதவயதில் தொட்டிலில் வைத்து ஆண்டவனருளால் பேசினவிபரம் முஹம்மதலிசொல்லியபடி, அவர்கள் பேசியது பேசக்கூடிய வயதிலல்ல. ஆனால், அவர் கள் அங்ஙஞ்செய்தது, கைக்குழந்தையாயும் தாயின்பாலை அருந் திக்கொண்டுமிருக்கும்போது. (3) யூனுசு நபி தம்மை மீன் விழுங்கிய பிற்பாடு அதன் வயிற்றினுள் உயிரோடும் அபாய மில்லாமலும் இருந்தவிபரம், மேலே குறிப்பிக்கப்பட்ட மூன்று அற்புதங்களின் உண்மையை ஆதரிக்க புகாரி திருமதி, இவர்க

ளிடமிருந்து நபியின் நம்பத்தகுந்த ஹதீதுகளை எடுத்துக்குறிப்பிட்டிருக்கிறேன், அதை கலைஞானம்பெற்ற இம்மௌல்வி ஒரே அடியாய் அவைகளில் பக்திக்குறைவாலோ அறிவின்மையாலோ மறுத்துவைத்துள்ளார். ஆதலால், இவ்வுலகத்தார் அவருடைய திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்பு வியாக்கியானம் எனும் புத்தகத்தை ஒருவகையிலும் நம்பக்கூடாதென ஏற்ற சமயத்தில் எச்சரிக்கைசெய்துவிட்டேன்.

(ஷேக் குலாம் ஹைதர்.)

---

## முஸ்லிம்கள் கோர்வை செய்த
## திருக்குர்ஆனின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

(1) பஞ்சாப் பாடியாலாவிலுள்ள டாக்டர் **அப்துல்ஹக்கீம்,** என்பவர் அரபிவாக்கியமில்லாமல் மொழிபெயர்த்திருப்பது அவருடைய உர்து கோர்வையைப்போன்று அவ்வளவு கெட்டவழியில் இழுத்துச்செல்வதல்ல.

(முபாரக்கம்பெனி பாடியாலா. ரூ 5-0-0,)

(2) **அபுல்பைஸி** என்பவர், அரபிவசனங்களோடு இரண்டு பகுதிகளாக நிருபண ஒழுங்காய் எழுதியிருக்கிறார். அற்புதங்களை மறுக்கும் சில குறிப்புகளைத் தவிர்த்து இந்த தப்ஸீர் மிக மேலானது. (அலகபாத், ஆஸ்கர் கம்பெனி தாள் நயத்திற்குத் தக்கபடி (10) ரூபாயிலிருந்து ரூ 15-மட்டும் விலை)

(3) **டெல்லி. மிர்ஸா ஹைரத்,** அரபிவாக்கியமில்லாமல் பைபிளின் முறையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். தெளிவாகவும், லேசாக அர்த்தப்படுத்தக்கூடியதுமான இக்கிதாபின் நோட்டுகள் வைதீகமுஸ்லிம்களின் வியாக்கியானங்களினின்றும் எடுக்கப்பட்டவை. ஆனால், கடினமான விஷயங்களில் சரியானபடி தெளிவுகொடுக்கிறதாயில்லை.

(கர்சான் கெசட் புத்தகசாலை. ரூ 15-0-0)

(4) **இஸ்லாமிய காலேஜ்,** (லாகூர்) தலைமை ஆசிரியராய் இருந்த டாக்டர் **அப்துல்கனி,** மொழிபெயர்ப்புச்செய்து கொண்டுவருகிறார். இவர் காபூலிலிருந்து விடுவிக்கப்பட்டு பஞ்சாபுக்குவந்ததும் நான் ரிஜிஸ்தர்செய்து அவசியமாய் அனுப்

பிய கடிதத்திற்கு பதில் தாம் தமது ஆங்கில தப்ஸீரில் அரபி வாக்கியங்களும், திருநபியின் ஹதீதுகளின் ஆதாரத்தின்மீது பூர்த்தியான குறிப்புகளும் எழுதிவருவதாக எழுதினர்; இதுவுமன்றி அத் தப்ஸீர் நமது தேசத்திலுள்ள வித்தியாதரப்பட்டம் பெற்ற அநேக முஸ்லிம்களையும், வெளிநாட்டிலுள்ள புது இஸ்லாம்களையும் வழிகெடுத்து தற்கால பிலாஸபி முதலிய ஸயன்ஸால் ஆதரிக்கப்பட்டனவாக வெளியாகியிருக்கும் சமயபேதிகளின் வியாக்கியானங்களுக்கு எதிருரைகளும் அடங்கியிருக்கின்றனவென்றும் அதை முடித்து அச்சுக்கனுப்ப ஒரு வருஷம் செல்லும் என்றும் தெரிவிக்கிறார்.

வேறெந்த முஸ்லிம்களாவது மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கில தப்ஸீர்களுள்ளனவாவென்று என்னால் உறுதிகூறமுடியாது. ஆனால், முஸ்லிம்சமயபேதிகளின் ஆங்கிலதப்ஸீர்களால்வழிகெட்டுப்போகாதபடி கார்க்க தற்சமயமுள்ள அவசியத்திற்கும், ஆத்திரத்திற்கும் செவிசாய்த்து இந்தியாவிலுள்ள ஓர் திறமை வாய்ந்த வைதீக முஸ்லிமாவது, அல்லது முஸ்லிம் அரசராவது உடன்படுவதற்கு இதுவே கடைசிச் சமயமாகும்.

சொற்பப்பேர் நீங்கலாக மற்ற வித்தியார்த்திகளனைவோரும் ஆங்கிலமல்லாத எதையும் வாசித்தறியும் சுவையற்றவர்களாயிருக்கின்றனர். நானோ செல்வத்தில் குறைந்தவனும், வயதில் தளர்ந்தவனுமிருப்பதால் நான் சொந்தமாய்த்தெரிந்து கொள்ளும் குமஸ்த்தாக்களின் உதவியில்லாமல் இப் பிரமாண்ட வேலையை என்னால் செய்துமுடித்தல் அசாத்தியம். ஆகவே, அக் குமஸ்த்தாக்களுக்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு தகுந் சம்பளம் கொடுக்க எந்த முஸ்லிம் அரசராவது, அல்லது ஐஸ்வரிய முஸ்லிமாவது முன்வருவார்களா என்று எதிர்பார்க்கிறேன்.

எழுதவேண்டுமென்று யோசித்துள்ள ஆங்கிலேய மொழிபெயர்ப்பில்குர்ஆன் அரபிவாக்கியங்களும், நபிகள் நாயகம் அவர்களுடைய தோழர்கள் இவர்களின் பிரமாணத்தின்பேரில் குர்ஆன் வியாக்கியானங்கள் செய்திருக்கும் பேர்போன ஆறு முஸ்லிம்களும் மற்றுமுள்ள நம்பத்தகுந்த ஹதீதுடைய இமாம்களும் வரைந்துள்ள பிரபந்தங்களிலிருந்து குறிப்புகளும்

எடுத்து எழுதவேண்டும். நபிகள் நாயகத்தின் பிரமாணத்திற்கும், குர்ஆன் வாக்கியங்களுக்கும் பொருத்தமான அரபிய அகராதியும், இலக்கணமும் பேதகப்படாத நிலைமையில் ஆதரவாய் எடுத்துக்காட்டவேண்டும். திருக்குர்ஆனுக்கும் தூய்ய நபியின் வாக்கியங்களுக்கும் அநுசரணையான சுவிசேஷ வாக்கியங்களையும்விட்டுவிடலாகாது.

நிற்க நமது வித்தியாதரப்பட்டம் வகித்தவர்களாவது, மற்றோர்களாவது, திருக்குர்ஆனின் கருத்தைத்தெளிவாய் அறிய விரும்பினால் பின்வரும் உர்து தப்ஸீர்களை வாசிக்கலாம். அவைகள் வைதீக முறையில் எழுதப்பட்டவையாயும், சமயபேதிகளுடையதப்ஸீர்களைப்போன்று வழிகெடுத்து விடாமல் கசடற்றதாயுமிருக்கின்றன.

(1) கீர்த்திவாய்ந்த முஸ்லிம் மதாபிமானியும், புகாரிமுஸ்லிம் இவர்களின் பிரபந்தங்களையும், தல்கீஸின் ஆறு பகுதிகளையும் உர்துவில் மொழிபெயர்த்தவருமான நவாப் ஹதீதுஸ்ஸமானின் திருக்குர்ஆனின் தப்ஸீர் ஒவ்வொரு விஷயத்திலும் நிகரற்றதும் உர்து அறிந்த ஒவ்வொரு முஸ்லிமிடத்திலுமிருக்க வேண்டியதாயுமிருக்கின்றது. (கிரையம் ரூ 8-0-0 அல்லது, 9-0-0. ஷேக் அகுமது புத்தகவியாபாரம், காஷ்மீரி பஜார், லாகூர்.)

(2) மீரட்டிலுள்ள ஆஷிக் இலாஹி இயற்றிய திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு ஓரங்களில் போதுமான குறிப்புகளுள்ளது. மீரட் இன்னும் இதர புத்தகவியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம். (சிறிய சைஸ் ரூ 4-0-0 அல்லது, 5-0-0)

(3) டில்லி ஹாபீஸ் நஸீர் அஹ்மத் இயற்றிய மொழிபெயர்ப்பு. குறிப்புகள் போதுமானவையன்று.

உர்துவில் கரைகண்ட வியாக்கியானங்கள், திருக்குர்ஆனின் ஆழ்ந்த கருத்தை அறியவிரும்புவோர் பின்வருபவற்றை வாசிக்கலாம்.

(1) முப்பது பகுதிகளாக **சையத் அமீர் அலி**, இயற்றிய, மவாஹிபுர் ரஹ்மான், ஏறக்குறைய எல்லா நம்பத்தகுந்த அரபிவிக்கியானங்களை மொழிபெயர்க்கப் பட்டவையும், ஒவ்

வொன்றின் இறுதியில் ஆசிரியரின் அபிப்பிராயமும் அடங்கியுள்ளது. (லக்நௌ நிவால்கிஷ்வர் புத்தகசாலையில், சுமார் நாற்பது ரூபாய் கிரையம்.)

(2) போபாளதேசத்து **நவாப் ஸித்திக் ஹஸனுல்**, இயற்றப்பட்ட குர்ஆனின் தர்ஜமா என்னும் கிதாபு மிகுதம் நம்பத்தக்கது. (20 ரூபாய் 16 வால்.)

(3) பதவுரையும், பதஇலக்கணமும் அடங்கிய அஹ்ஸமுத் தப்ஸீர் (30) வால்யம் உள்ளது ரூ 35-0-0. டெல்லி மூர் அச்சுக்கூடம்.

(4) இவைகளிலெல்லாம் மேலானதும் சரியான விலையுள்ளதுமான ஆறு பாகங்களுள்ள, அஹ்ஸனுத் **தபாஸீர்**. பாரூக்கி அச்சுச்கூடத்தில் (டெல்கி) பத்து அல்லது பனிரண்டுரூபாய்க்குப் பெற்றுக்கொள்ளலாம்.

(5) தப்ஸீர் ஹக்கானி. இது டில்லி மௌலானா ஹக்கானி அவர்களால் 8 வால்யமாக இயற்றப்பட்டது நம்பத்தகுந்த எல்லாவழிகளிலும் சிறந்ததுமன்றி, **தப்புமார்க்கத்தாரின்** தப்ஸீர்களின் தவறுகளையும் விளக்கக்கூடயது. சுமார் 30 ரூபாய்.

6. தப்ஸீர் பயானுல் குர்ஆன் இது மௌலானா அஷ்ரப் அலீ அவர்களால் 12–வால்யமாக இயற்றப்பெற்றது. வியாக்கியானம் மிக அருமையானது. சுமார் 24 ரூபாய் (இவ்விரண்டும் முஹம்மது உதுமான், அஷ்ரபியா புத்தகசாலை தரீபாகலான் டில்லி என்ற விலாசத்தாரிடம் கிடைக்கும். ப-ர்.

7. ஷஹாதத்துல் குர்ஆன்:— இரண்டாம்பாகம் காதியானிகள் குர்ஆனின் முப்பது ஆயத்தின் கருத்தைப்புறட்டி ஈஸா (அலை) மரணமாய்விட்டார்களென்று கூறுவதை வேரறக்களைந்து அவர்களின் கல்வித்திறமையை காட்டப்பட்டிருக்கிறது விலைரூ.1-0-0

8. ஹயாத்தே மஸீஹ்:— ஹஸ்ரத் ஈஸா (அலை) மரணமாக வில்லையென்பதற்கு குர்ஆன், ஹதீது, தப்ஸீர், இமாம்கள், முஹத்திதீன், புக்கஹாக்களின் சாட்சியங்களை யெடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது மன்றி காதியானிகளின் சூழ்ச்சிகளையும் விளுக்கப்பட்டிருக்கிறது. காதியானிகளுடன் மல்லாடுகிறவர்களுக்கு இக்கிதாபுகள் அவசியமாகின்றன. விலை ரூ. 1—2—0

9. உலமாக்களின் பத்வா:— இதில் காதியானி மதஸ்தரின் கொள்கைகளை விபரித்து அவர்களோடு முஸ்லீம்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகளும் விளக்கி அவர்களைப்பற்றிய வட இந்தியா உலமாக்களின் தீர்மானங்களும் எழுதப்பட்டிருக்கிறது முஸ்லீம்கள் அவசியம் பார்க்கத்தகுந்தது, விலை ரூ. 5—0—0.

10. மிர்ஸாயிநாவல்:— இது ஒரு போலீஸ் சப்இன்ஸ்பெக்டரால் இயற்றப்பட்ட மகா ஆச்சரியமும் பார்க்கப் பார்க்கத் திகட்டாத ருசிகரமான ஓர் சிறந்த கிரந்தமாகும் இதில் ஸ்திரீ புருஷர் இருவர்க்கிடையில் சம்வாதம் நடந்த முறையாக காதியானி மதஸ்தரின் சர்வ புரட்டுகள் பொய்கள் முன்னறிக்கைப் பொட்டணங்கள் தந்திரங்கள் அவர்களின் ஆதாரக்கதைகள் முதலியவற்றைத் தகுந்த ஆதார பூர்வமாகவும் பார்க்கிறவர்களுக்கு வியப்பையுண்டுபண்ணும் விதமாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. காதியானி லாகூர்பார்ட்டிகளின் சகலதாவாக்களும் இதன் முன் ஒரு கொசுகின்சிறகுக்குகூட நிகராகாதென்பது திண்ணம் அன்றியும் இவர்களின் மதப்பிரசாரமும் தந்திரமும் நன்கு விளங்கிவிடுகிறதுடன் பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர்கூட இவர்களின் புத்திசாலித்தனத்தைப்பற்றி நகைத்துவிடுவார்கள். இதன் ருசி பார்த்தவர்களுக்கே இனிது விளங்கும் என்பது நிச்சயம். விலை ரூ. 2—2—0

N. B:— ஒரு ரூபாய்க்கு குறைந்து வி. பி. செய்யப்படமாட்டாது. குறைந்து வாங்குகிறவர்கள் செலவுக்கும் சேர்த்து லேபில் அனுப்பவேண்டும். சிலோன் லேபிலை கவனிக்கப்படமாட்டாது.

'முஸல்மான் புத்தகசாலை', தென்காசி.

பிஸ்மில்லாஹ்.

# "முஸல்மான்"

## இஃதோர் "இஸ்லாமிய" அரபி மாதாரம்ப

## தமிழ் மாசிகை.

நம் தமிழ் நாட்டு முஸ்லீம் சகோதரர்களே!

"முஸல்மானெ"ன்ற நாமத்துடன் வெளிவந்துலாவுகிற சஞ்சிகை இன்னதென உங்களுக்குத் தெரியுமா? இஸ்லாமிய உண்மைத் தத்துவங்களையும், மூலக் கொள்கைகளையும். உணர்ந்துகொள்ளவேண்டாமா? குர்ஆன், ஹதீது முதலிய மார்க்க நூல்களில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களை அறிந்துகொள்ள, உங்களுக்கு ஆவலில்லையா? அருட்பெற்ற ஸஹாபாக்களின் நடப்பு வழக்கங்களை அறிந்து அதன்படி ஒழுகவேண்டாமா? நமது மத நிபுணர்களாகிய, இமாம்கள் பெரியோர்களுடைய சரிதைகளை நீங்கள் படித்துக்கொள்ள வேண்டாமா? இஸ்லாத்தின் சமரசக் கொள்கைகளையும், சகோதரத்வம், சமத்துவம், ஒற்றுமை முதலிய இஸ்லாமிய நல்லறிவுகளைத் தெரிந்துகொள்ள உங்களுக்கு விருப்பமில்லையா? காதியானி மதஸ்தர் முஸ்லீம்களை யெல்லாம் குறை கூறி புது மார்க்கத்திற் கழைக்கிறதையும், சிலர் முஸ்லீம்களுடைய கோலத்திலும், சிலர் சுன்னத்து ஜமாஅத்துடைய கோலத்திலும் தோன்றி, இவ்விஸ்லாமிய மூலக் கோட்பாடுகளைப் புறட்டி வருகிறதை தெரிந்து நீங்கள் விலகிக்கொள்ளவேண்டாமா? இன்னும், அது சுன்னத்து ஜமாஅத்துக்கு விரோதமின்றி மார்க்க விஷயங்களை அவரவர்களுக்குஊட்டி மதவிரோதசெயற்களை அவ்வப்பொழுது கண்டித்து பிறமதஸ்தர்களால் இஸ்லாமுக்கு ஏற்படும் இடையூறுகளையும், அதற்குத் தக்க பரிகாரங்களையும் விளக்கி வருகிற ஓர் அழகிய சஞ்சிகையல்லவா இது. ஏன் இன்னும் சந்தாதாராய்ச் சேராது நிற்கின்றீர்கள். இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

வருட சந்தா உள் நாடுகளுக்கு ரூ. 1—8—0 } தான்.
" வெளி நாடுகளுக்கு ரூ. 2—0—0 }

பத்திராசிரியர்,
"முஸல்மான்" ஆபீஸ்,
தென்காசி.